Book 4

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்



பூமியில் உள்ள பெரும்பாலானோரை நீர் பின்பற்று வீரானால் அவர்கள் இறைவனின் பாதையை விட்டு உம் கவனத்தைத் திருப்பி விடுவார்கள். அவர்கள் யூகங்களையே பின்பற்றுகிறார்கள். இன்னும் அவர்கள் கற்பனையே செய்கிறார்கள்" - அல்குர்ஆன் (6:116)

டிசம்பர்
1999
DECEMBER

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# The Simple Facts

Like the Quran itself, the Quran's mathematical coding ranges from the very simple, to the very complex. The Simple Facts are those observations that can be ascertained without using any tools. The complex facts require the assistance of a calculator or a computer. The following facts do not require any tools to be verified, but please remember they all refer to the original Arabic text:

1. The first verse (1:1), known as “Basmalah,” consists of............19 letters.
2. The Quran consists of 114 suras, which is.. ...........19 x 6.
3. The total number of verses in the Quran is 6346, or .................19 x 334.
   [6234 numbered verses & 112 un-numbered verses
   (Basmalahs) 6234 + 112 = 6346] Note that 6+3+4+6= .......19.
4. The Basmalah occurs 114 times, despite its conspicuous
   absence from Sura 9 (it occurs twice in Sura 27) & 114 = .......19 x 6.
5. From the missing Basmalah of Sura 9 to the extra
   Basmalah of Sura 27, there are precisely .. ..................19 suras.
6. It follows that the total of the sura numbers
   from 9 to 27 (9+10+11+12+ ... + 26 +27) is 342, or ...............19 x 18.
7. This total (342) also equals the number of words
   between the two Basmalahs of Sura 27, and 342 = .............. 19 x 18.
8. The famous first revelation (96:1-5) consists of....... ..........19 words.
9. This 19-worded first revelation consists of 76 letters.................19 x 4.
10. Sura 96, first in the chronological sequence, consists of ...........19 verses.
11. This first chronological sura is placed atop the last.. .............. ...19 suras.
12. Sura 96 consists of 304 Arabic letters, and 304 equals ............. 19 x 16.
13. The last revelation (Sura 110) consists of..
    19 words.
14. The first verse of the last revelation (110:1) consists of ............19 letters.
15. 14 different Arabic letters, form 14 different sets of
    "Quranic Initials” (such as A.L.M. of 2:1), and prefix
    29 suras. These numbers add up to 14+14+29= 57 = ....... .19 x 3.
16. The total of the 29 sura numbers where the Quranic
    Initials occur is 2+3+7+ ... + 50+68 = 822, and 822+14 (14 sets of initials)
    equals 836, or. 19 x 44.
17. Between the first initialed sura (Sura 2) and the last initialed sura (Sura 68)
    there are 38 un-initialed suras ............ 19 x 2.
18. Between the first and last initialed sura there are.............19 sets of
    alternating“initialed” and “uninitialed” suras.
19. The Quran mentions 30 different numbers: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19,
    20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2000, 3000, 5000, 50,000, &
    100,000. The sum of these numbers is 162146, which equals..........19x8534.

*This is a condensed summary of the Simple Facts.*

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

டிசம்பர் 1999
நினைவு 4

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்

C.S. ரஃபியுதீன்

துனை ஆசிரியர்கள்:

N.A. அஹமது ஹுஸேன்

K. முஹமது ஷரீப் மஜாஹிரி

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

### இதழின் உள்ளே

★ ரமளானே வருக! வருக!
★ ரமளான் - குர்ஆன் இறக்கப்பட்ட மாதம்
★ லைலத்துல் கத்ர்
★ நம்பிக்கையற்றவர்களுக்கு ஒரு நியாயமான எச்சரிக்கை!
★ யாரை நம்பப் போகிறோம்?
★ ஷைத்தான் ஒரு மாபெரும் மனோவசியக்காரன்
★ ஹதீஸ்களின் உண்மை நிலை.
★ ஸலவாத்துச் சொல்வது ஷிர்க்
★ இறைவனின் முத்திரை-19
★ குர்ஆன் மட்டும் போதாதா? (முபீன் கேள்விகளுக்கு - பதில்கள் )

★ ★ ★ தலையங்கம் ★ ★ ★

# ரமலானே வருக! வருக!!

பற்பல விதமான உணர்வுகளுடன் இஸ்லாமிய உலகில் ரமலான் மாதம் வரவேற்கப் படுகிறது. வழக்கம் போலவே அல்லாஹ்வின் வேதத்தை மட்டும் பின்பற்றாதவர்கள், நபியின் பெயரால் கூறப்பட்ட செவி வழிச்செய்திகளைப் பின்பற்றுபவர்கள் ரமலானின் சில நோன்புகளை இழக்கவோ அல்லது அதிகப் படுத்தவோ போகிறார்கள். மகத்துவமிக்க புனித இரவான லைலத்துல்கத்ரையும் இழக்கப் போகிறார்கள். ஏனெனில் ஹதீஸ்கள் அவர்களைப் பிறையைக் கண்ணால் பார்த்து நோன்பு வைக்கச் சொல்கிறது. எனவே ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதத்தில் என்றிலிருந்து நோன்பு ஆரம்பிக்கிறது என்பதில் முஸ்லீம் சமுதாயத்தின் இடையே பெருங்குழப்பம். காயல்பட்டணத்தில் இன்று நோன்பு இல்லை, திருநெல்வேலியில் இன்று நோன்பு என்பது போன்ற குளறுபடிக் காட்சிகள் ஏராளம். ரமலான் முதல் நாளை இவர்கள் அதிகார பூர்வமாக அறிவிக்காததால் நோன்பு வைக்காத முஸ்லீம்கள் 'ஸவூதியில் இன்று நோன்பு ஆரம்பமாம்' என்று குழப்பத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் சம்பவங்கள் முஸ்லீம் சமுதாயத்தில் வருடா வருடம் தவறாமல் நடக்கும் ஒன்று. ஒரு சிலர் சரியான நாளன்று நோன்பு ஆரம்பித்தாலும் பெரும்பான்மையான பிரிவினர் ஒரு நாள் முன்னரோ அல்லது ஒன்று அல்லது இரண்டு நாட்கள் பின்னரோ தான் ரமலான் நோன்பை ஆரம்பிக்கிறார்கள். மேலும் ரமலான் இரவுகளில் அதிகம் நன்மை செய்வதாக எண்ணிக்கொண்டு 'தராவீஹ்' என்ற பெயரில் இறைவனால் கடமையாக்கப்படாத தொழுகை ஒன்றையும் உண்டாக்கிக் கொண்டு வழக்கம் போலவே அது எத்தனை பகுதிகளைக் (ரக-அத்துகளை) கொண்டது, உண்டா? இல்லையா? என்று சண்டையிட்டுக்கொள்கிறார்கள் .சவால்களைப்பரிமாறிக் கொள்கிறார்கள். 'பெருநாள்' என்று இரவு 3 மணிக்குக் கூட அறிவித்திருக்கிறார்கள். நோன்பின் முடிவைத் தான்

இவர்கள் பெருநாள் என்று கொண்டாடுகிறார்கள். பலர் 'பித்அத்தாக' 'அனாச்சாரமாக' அன்று ஒரு சிறப்புத் தொழுகையும் செய்கிறார்கள். இதற்குக் குர்ஆனில் எந்த ஆதாரமுமில்லை .

மனிதர்கள் எந்த நாளிலும் உண்ணுவதையோ, புத்தாடை உடுத்துவதையோ இறைவன் தடை செய்யவில்லை. ஆயினும் இறைவனால் கூறப்படாத அங்கீகரிக்கப்படாத - எந்த ஒரு தொழுகையையும் தொழுவது நாம் இறைவனைத் தொழுததாகாது.

இத்தகைய குழப்பங்களிலும், அனாச்சாரங்களிலும் இருந்து நம்மை மீட்டு நமக்கு நேரான வழியைக் காட்டவே இறைவன், குர்ஆனை, மெய்ப்பிக்கும் தூதரை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர், குர்ஆனை யாராலும் மறுக்க முடியாதபடி மெய்ப்பித்து அது மட்டுமே மார்க்க ஆதாரம் என்று நிரூபித்துச் சென்றிருக் கிறார். எனவே இறைவன் நமக்குக் காட்டிய அல்குர்ஆனின் வழிப்படி 'சந்திரன் காலம் காட்டுவதாக உள்ளது' என்ற வசனத்தின் அடிப்படையில் சந்திரன் அனுப்பிசகாது தன் வட்ட வரைக்குள் சுற்றும் என்ற வசனத்தின் அடிப்படையில் சூரியத் தேதியைக் கணக்கிடுவது போல் விஞ்ஞானரீதியாக சந்திரத் தேதியைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் ரமலான் எந்த நாளில் ஆரம்பிக்கிறது என்று முன் கூட்டியே அறிந்து ரமளானைத் தயாராக வரவேற்று சரியான, உறுதிப்படுத்தப்பட்ட நாளில் புனித இரவான லைலத்துல் கத்ரையும் இறை வழிப்பாட்டில் கழித்து இறைவனின் திருப்தியை நாடுவோமாக! மனித சமூகத்தின் மேல் இரக்கமும், கருணையும் கொண்ட இறைவன் தன்னை விட்டு விலகிய தன் அடியார்களைத் தன்பால், மீட்டுக் கொள்வதற்காக, அவர்களுக்கு வழிகாட்ட தன் வார்த்தைகளை வேதமாக்கி அருளியதற்காக நன்றி உணர்வுடன் நோன்பைக் கடைப்பிடிப்போமாக! நோன்பு பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் என்று ஷைத்தான்கள் கூறுவதை நம்பி ஏமாந்து போகாமல், இறைவன் கூறும் பலனான "தக்வா' என்னும் இறையச்சத்தை, நற்குணத்தை, மீட்சியை அடைந்து அதன் மூலம் இறை திருப்தியை அடைய இறைவன் நமக்கு அருள் செய்வாராக!

★ ★ ★

# ரமலான்

## குர்ஆன் இறக்கப்பட்ட மாதம்

"ரமலான் மாதத்தின் போதுதான் குர்ஆன் இறக்கியருளப்பட்டது. அது மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், தெளிவான பாடங்களைக் கொண்டதாகவும் சட்ட புத்தகமாகவும் உள்ளது. உங்களில் யார் அம்மாதத்தைக் காண்கிறாரோ, அவர் அதில் நோன்பு இருக்க வேண்டும். யார் நோயாளியாகவோ பிரயாணியாகவோ, உள்ளாரோ அவர் அதே எண்ணிக்கையில் மற்ற நாட்களில் கணக்கிட்டுக் கொள்ளலாம். இறைவன் உங்களுக்கு இலகுவாக்கவே நாடுகிறார். அன்றி சிரமத்தை அல்ல. இது நீங்கள் உங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக, இறைவனை நீங்கள் பெருமைப்படுத்தித் துதிப்பதற்காகவும், உங்கள் நன்றியை நீங்கள் தெரிவிப்பதற்காகவுமே. (2:185)

ரமலான் முபாரக்
(பாக்கியம் மிக்க ரமலான் மாதம்)
நோன்பின் நாட்கள்
முதல் நோன்பு டிசம்பர் - 9
இறுதி நோன்பு ஜனவரி - 7

ரமலான் இஸ்லாமிய நாட்காட்டியின் 9-வது சந்திர மாதமாகும். உலகம் முழுதும் உள்ள முஸ்லிம்கள் (அடி பணிந்தோர்) இம்மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் விடியற்காலை முதல் சூரிய அஸ்தமனம் வரை நோன்பு இருக்கிறார்கள். நோன்பின் போது அவர்கள், குர்ஆனில் உள்ள இறை கட்டளைப்படி உண்ணுவதிலிருந்தும், பருகுவதிலிருந்தும் உடலுறவு கொள்வதிலிருந்தும் விலகிக்கொள்கிறார்கள்.

...... கறுப்பு நூலான இரவின் இருட்டிலிருந்து வெள்ளை நூலான வெளிச்சம் தெளிவாகும் வரை நீங்கள் உண்ணலாம், பருகலாம். பின் சூரிய அஸ்தமனம் வரை நீங்கள் நோன்பு இருக்க வேண்டும். (2:187)

**சந்திர மாதம் என்பது என்ன?**

ஒரு சந்திர மாதம் என்பது சுமாராக 29.5 நாட்களாகும். இது நிலவு ஒரு முறை பூமியைச் சுற்ற எடுத்துக் கொள்ளும் காலமாகும். சராசரியாக ஒரு சூரிய மாதத்தைவிட ஒரு சந்திர மாதம் ஒருநாள் குறைவானது ஆகும். எனவே ஒரு சூரிய வருடத்தைவிட ஒரு சந்திர வருடம் 10-12 நாட்கள் குறைவானது. எனவே ரமலான் மாதம் ஒவ்வொரு வருடமும் 10-12 நாட்கள் முன்னதாகவே வரும். இவ்வாறு நடப்பதால் பகல் நீளமாகவும், உஷ்ணமாகவும் உள்ள கோடைக் காலங்களிலும், பகல், சிறிதாகவும் குளிராகவும் உள்ள குளிர் காலங்களிலும் நாம் நோன்பு இருக்க வேண்டி வரும். இறைவனின் இந்த அழகிய ஏற்பாடு, நாம் நாளின் நீளத்தையும், தட்பவெப்பத்தையும் பொருட்படுத்தாமல் எல்லாக் காலங்களிலும் நோன்பு இருக்கிறோமா என்பதைச்சோதிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

ஒரு புதிய சந்திர மாதத்தின் துவக்கம் என்பது, பூமியைச் சுற்றி நிலவு தன் வட்டவரைக்குள் சுழலும் போது, அது சூரியனுடன் நேர்க் கோட்டில் வரும் தருணம் ஆகும். அப்போது பூமிக்கு அப்பால் உள்ள நிலவின் பகுதியில் மட்டுமே சூரிய ஒளிவிழும். இந்நிலையில் நிலவு 'அமாவாசை' என்று அழைக்கப் படுகிறது. அப்போது நிலவின் இருட்டான பகுதி மட்டுமே பூமியை நோக்கி திரும்பி இருக்கும். விளக்கமாகக் கூறுவதானால், அமாவாசை நிலவு பூமியிலிருந்து தெரியாது. ஏனெனில் அப்போது சூரிய ஒளி பூமியை முன்னோக்காத, நிலவின் பின் பகுதியில் மட்டுமே விழும்.

தொடர்ந்து நிலவு பூமியைச் சுற்றும் போது, 'பிறை' உருவாக ஆரம்பிக்கிறது. இது அமாவா சைக்குப் பின் சில நிமிடங்களிலேயே நடக்கும் என்றாலும் அப்பிறை அதிகமான நேரம் தெரியாது. பாரம்பர்ய முஸ்லிம்கள் பிறையைக் கண்ணால் காணும் வரை நோன்பை ஆரம்பிப்பதில்லை. முஸ்லிம் நாடுகளில் முதலில்பிறையைக் காண்பவர்களுக்கு வெகுமதிகள் அளிக்கப்படுகின்றன.

அவ்வெகுமதியைப் பெறுவதற்காக சிலர் பிறை நன்றாகத் தெரியக் கூடிய மலை முகடுகள் போன்றவற்றில் கூடாரம் அடித்துத் தங்கி பிறையைக் காண முயற்சி செய்கிறார்கள்.

### பிறையைக் கண்ணால் பார்ப்பது அவசியமா?

இறைவன், ஒரு சந்திர மாதத்தின் துவக்கத்தையும், முடிவையும், நாம் சரியாகக் கணிப்பதற்குரிய விஞ்ஞான அறிவை நமக்குத் தந்திருக்கிறார். எனவே, நோன்பை ஆரம்பிப்பதற்கு பிறையைக் கண்ணால் காண வேண்டிய அவசியம் இல்லை . இத்தகவலை உங்கள் பகுதியிலுள்ள ஏதேனும் ஒரு விண்வெளி ஆராய்ச்சி நிலையத் திலோ, கோளரங்கத்திலோ நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். சில நாட்காட்டிகளிலும், சஞ்சிகைகளிலும், செய்தித்தாள் களிலும் கூட சந்திர பட்சங்களைப் பற்றிய தகவல்களைத் தொடர்ந்து வெளியிடுகிறர்கள் (உ.ம்) ஹிந்து - எக்ஸ்பிரஸ்). எந்த நாளிலிருந்து நோன்பை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வரையறுக்க, நாம் அமாவாசை நேரத்தை, இஸ்லாமிய நாளின் துவக்கமான 3 சூரிய அஸ்தமனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

### இஸ்லாமிய நாள் என்றால் என்ன?

ஹீப்ரு நாளும், இஸ்லாமிய நாளும் ஒன்றே ஆகும். அவை சூரிய அஸ்தமனத்தில் துவங்கி, சூரிய அஸ்தமனத்துடன் முடியும். இம் முறையில் பகலுக்கு முன் இரவு வரும். இஸ்லாமியர்கள் பலரும் 'வெள்ளி இரவு' என்று கூறினால் அவர்கள் உண்மையில் வியாழக் கிழமையின் இரவைப் பற்றித்தான் கூறு கிறார்கள். ஏனெனில் அவர்க ளின் நாட்களில் அவ்விரவு வெள்ளிக்கிழமையுடன் சேர்ந்ததாகும்.

### ரமலான் ஆரம்பம்

ரமலான் படு துவக்கத்தை வரையறுக்க நமக்கு இரண்டு உண்மைகள் தெரிய வேண்டும். முதலில் அமாவாசையின் நேரம். இரண்டாவது அதே அமாவாசை

நாளின் சூரிய அஸ்தமன நேரம் அமாவாசை நேரத்துடன் புது சந்திர மாதம் துவங்கினாலும், நடைமுறையில் அது, அமாவாசைக்குப் பின்வரும் சூரிய அஸ்தமனத்திலிருந் துதான் கணக்கிடப்படும்.

ரமளான் மாதத்தின் 'அமாவாசை' நேரம் (New Moon) சூரிய அஸ்தமனத்திற்கு முன்னர் அமைந்தால் நாம் மறுநாள் விடியற் காலையிலிருந்து (ஃபஜ்ர்) நோன்பைத்துவக்க வேண்டும். ஆயினும், அமாவாசை நேரம் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் அமைந்தால், அவ்விரவு முந்திய மாதத்தின் (ஷஃபான்) இறுதி நாளாகவே அமையும். ஆகவே அமாவாசை நேரம் சூரிய அஸ்தமனத்திற்குப் பின் விடியற் காலைக்கு (ஃபஜ்ர்) முன் அமைந்தாலும், அடுத்த சூரிய அஸ்தமனத்திலிருந்து தான் ரமளான் துவங்கும். எனவே நாம் அந்த அஸ்தமனத்தைத் தொடரும் அடுத்த காலையிலிருந்து நோன்பைத் துவக்க வேண்டும்.

### ரமளான் முடிவு

ரமளான் முடிவை வரையறுக் கவும் நாம் இதே முறையைத்தான் பின்பற்ற வேண்டும். ரமளானுக்கு அடுத்த மாதத்தின் (ஷவ்வால்) அமாவாசை நேரம் சூரிய அஸ்தமனத்திற்கு முன் அமைந்தால் அன்றைய அஸ்தமனத்துடன் நாம் நோன்பை முடித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அந்த அஸ்தமனத்தைத் தொடர்வது ஷவ்வால் மாதத்தின் முதல் நாள் ஆகும். அமாவாசை நேரம் சூரிய அஸ்தமனத்திற்குப் பின் அமைந்தால் நாம் அடுத்த நாளும் நோன்பிருக்க வேண்டும். ஏனெனில் அதுவே ரமளானின் இறுதி நாளாக அமைகிறது.

### இவ்வருடத்தின் ரமளான்

ரமளான் மாதத்தின் துவக்கத் தையும், முடிவையும் கணிக்கப் பயன்படுத்தப்படும் அமாவாசையின் நேரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. GMT ல்

இரவு 10.32 PM<br>
(22:32) - டிசம்பர் 7.<br>
மாலை 6:14 PM<br>
(18:14) ஜனவரி 6

ஒவ்வொரு (Time Zone) நேரமண்டலத்தின் சரியான நேரமும் GMT (Greenwich mean Time) எனப்படும். உலகப் பொது நேரத்துடன் தொடர்பு கொண்டதாக அமைந்துள்ளது. உதாரணமாக தமிழ்நாடு, மற்றும் . இந்தியா முழுவதும் GMT நேரத்திலிருந்து 5.30 மணி நேரம் கூடுதல் ஆக உள்ளது. உதாரணமாக, இப்போது GMT நேரம் பகல் 12.00 மணி என்றால் இந்தியாவில் மாலை 5.30 மணி ஆக இருக்கும். இறைவனின் நாட்டப்படி, மேற்கண்ட தகவலின் அடிப்படையில் இந்தியாவில் ரமளான் முதல் நாள் டிசம்பர் 9 ஆக இருக்கும். ரமளானின் இறுதி நாள் ஜனவரி 7 ஆக இருக்கும். லைலத்துல் கத்ர் இரவு ஜனவரி 3 சூரிய அஸ்தமனத்தில் துவங்கி ஜனவரி 4 காலை வரை இருக்கும்.

# லைலத்துல் கதர்

லைலத்துல் கதர் எனப்படும் விதியின் இரவு முஸ்லிம்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த இரவாகும். இந்த இரவுதான் நம் வாழ்வின் வழிகாட்டியான. அல்குர் ஆன் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்விடமிருந்து முஹம்மத் நபியின் மனதில் இறக்கப்பட்ட இரவாகும். அல்குர் ஆன் ரமலான் மாதத்தில் இறக்கப்பட்டது (2:185). பாரம்பரியமாக 5 முஸ்லிம்கள் ரமலான் 27-ம் இரவன்று லைலத்துல் கத்ரைக்கொண்டாடி வருகிறார்கள்.

இறைவன் இந்த இரவை ஆயிரம் மாதங்களைவிட மேலான தாகும் என வர்ணிக்கிறார். இந்த இரவில் வானவர்களும், பரிசுத்த ஆவி - ரூஹ் என்றழைக்கப்படும் ஜிப்ரீலும் இறைவனின் கட்டளைப்படி காரியங்களை நிறை வேற்றுவதற்காக இறங்குகிறார்கள். அவ்விரவு விடியும் வரை சாந்தி நிலவும் என்று குர்ஆன் 97:1-5 நமக்குக் கூறுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு முக்கியமான இரவாக இது இருப்பதால், நன்மைகளை அதிகம் அடைய வேண்டும் என்று எண்ணும் முஸ்லிம்கள் (இறைவனுக்கு அடி பணிந்தோர்) இந்த இரவை இறைத் தியானத்தில் கழிக்கின்றனர். இது தனித்தனியாகவோ அல்லது கூட்டாக பிற முஸ்லிம்களுடன் இறை இல்லங்களிலோ செய்யப்படுகின்றது. சில முஸ்லிம்கள் ரமலானின் கடைசிப் பத்து நாட்களில் இஃதிகாப் எனப்படும் இறை இல்லத்தில் தங்கும் வழமையைக் கடைப்பிடிக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் இறைவனின் அருளையும், திருப்தியையும் தேடுகின்றனர். இது அவர்களின் (அடிபணிதலில்) நம்பிக்கையை அதிகப் படுத்துகின்றது.

லைலத்துல் கதர் ரமலானின் 27-ம் இரவுதான் என்றாலும் ஷைத்தானியக் கண்டு பிடிப்புக் களான பொய்யான ஹதீஸ்களைப் பின் பற்று வோருக்கு இவ்விஷயத்திலும் உறுதி இல்லை. குர்ஆன் அல்லாத மற்ற செய்திகளை மார்க்கமாக் எண்ணிப் பின்பற்றுவ தால்தான் அவர்களுக்கு லைலத்துல் கத்ரிலும் குழப்பம் - நபியும் நபித்தோழர்களும் இவ்விரவை நன்கு அறிந்திருந்தாலும் இறைவன் அதை அவர்களுக்கு மறக்கச் செய்து விட்டார் என்று ஸஹீஹ் புகாரி என்ற நூலில் ஒரு செய்தி கூறப்படுகிறது. கடைசி பத்து இரவுகளில் லைலத்துல் கத்ர் என்று ஒரு செய்தி. அதில் ஒற்றைப் படை இரவுகள்தான் என்று மற்றொரு செய்தி. சிரிக்க வேண்டாம். லைலத்துல் கத்ர் ஒவ்வொரு வருடமும் மாறி மாறி வரும் என்றும் ஒரு செய்தி உள்ளது. இதற்கு என்ன அர்த்தம் என்பதை ஹதீஸ்களைப் பின்பற்றுவோர், அவற்றுக்கு

வக்காலத்து வாங்குவோர்தான் நமக்குத் தெளிவாக்க வேண்டும்! மெய்யான முஸ்லிம்கள் (அடிபணிந் தோர்) தங்கள் இறைவனை முழுமையாக நம்புவார்கள். அவர் தங்களை ஏமாற்ற மாட்டார் என்பதில் உறுதியாக இருப்பார்கள். எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய மிக ஆதாரபூர்வமான, அழகான ஹதீஸான அல்குர் ஆனில் (39:23) நாம் இவ்வேதத்தில் எதையும் விட்டு விடவில்லை (6:38) என்று கூறுகிறார். எனவே மெய்யான நம்பிக்கை கொண்டவர்கள் தங்களுக்கு தேவையான எல்லா விஷயங்களும் குர்ஆனில் கூறப்பட்டு உள்ளது என்பதை நன்கறிவார்கள். எனவேதான், Dr. ரஷாத் கலீஃபா மூலம் அல்லாஹ் 19 என்ற அற்புதக் குறியீட்டை வெளிப்படுத்துவதற்கு முன்னரும் கூட இஸ்லாமிய அறிஞர்கள் லைலத்துல் கத்ர் இரவு எது என்பதைப் பற்றி குர் ஆனிலே ஆராய்ச்சிகள் செய்திக்கிறார்கள்.

இவ்விரவு பற்றிக் கூறும் அத்தியாயம் 97-ல் லைத்துல் கத்ர் என்ற 9 எழுத்துக்கள் கொண்ட சொற்றொடர் மூன்று முறை (97:1,2,3) கூறப்படுவதில் சிலர் சில அத்தாட்சிகளைக் கண்டனர். அதாவது 9x3 - 27. இது 27ம் இரவுதான் லைலத்துல் கத்ர் என்பதைக் குறிக்கிறது என்பதை அவர்கள் கண்டு கொண்டனர். மற்ற சில இஸ்லாமிய ஆராய்ச்சியாளர்கள் அத்தியாயம் 97-ல் 30 வார்த்தைகள் உள்ளதைக் கவனித்தனர். இது ஒரு மாதத்தின் 30 நாட்களைக் குறிக்கிறது. நாம் அந்த அத்தியாயத்தில் உள்ள வார்த்தைகளை எண்ணினால் அதில் 27 வது வார்த்தையாக (ஹிய) அது என்ற வார்த்தை உள்ளது. இது 27-ம் இரவுதான். அது (லைலத்துல் கத்ர் ) என்பதைக் காட்டுகிறது என்று கண்டனர்.

இறைவனின் வேதத்திலிருந்து மனிதர்கள் பெறும் தகவல்கள் அனைத்தையும் ஆதாரப்படுத்து வதாகவும் 19 என்ற குறியீடு உள்ளது. அது லைலத்துல் கத்ர் எப்பொழுது? என்ற கேள்விக்கு பதிலளிப்பதாகவும் யூகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கக் கூடிய தாகவும் உள்ளது. இறைவனின் இந்தக் குறியீடு 'விதியின் இரவு' (லைலத்துல் கத்ர்) என்றைக்கு வருகிறது என்பதை நமக்குக் கூறுகிறது.

லைலத்துல் கத்ர் என்பதன் எண் மதிப்பு (Gematrical Value) 410 ஆகும். அதாவது அதில் இடம் பெறும் ஒன்பது எழுத்துக்களுக்கும் ஆன எண் மதிப்பின் கூட்டுத் தொகை லாம் = 30, யே = 10, லாம் = 30, தே = 5, அலிஃப்=1, லாம் = 30, காஃப் = 100, தால் = 4, ரே = 200 அதாவது 30+10+30+5+1+30+100+4+200 = 410. இவ்வெண் மதிப்புக்களின் கூட்டுத் தொகையான 410 உடன் சூரா எண்ணான 97-ஐயும், லைலத்துல் கத்ர் என்ற சொற்றொடர் இடம் பெறும் வசன எண்களையும் நாம் கூட்டினால், அதாவது, 410+97+1+2+3 = 513 அல்லது 19x27

**எல்லாப் புகழும் இறைவனுக்கே!**

நம்பிக்கையற்றவர்களுக்கு

# ஒரு நியாயமான எச்சரிக்கை !

இறைவனை மட்டும் வணங்கிட வேண்டும் என்று எவரேனும் வலியுறுத்தினால், ஏவினால் அவருக்கு உதவி செய்ய வேண்டியது, கலப்பின்றி மெய்யாகவே இறைவனை மட்டும் வணங்கும் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

யாராவது ஒருவர், அது யாராக இருந்தாலும் சரி, இறைவனை மட்டுமே வணங்கும்படி நமக்கு அறிவுறுத்தினால் அவரை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஏனெனில் ஷைத்தான்களால் இவ்விஷயத்தை கூற முடியாது. கூறவும் மாட்டார்கள். (26:210-212) இறைவனை மட்டுமே வணங்குங்கள் என்ற இந்த செய்தியை மனித சமுதாயத்திற்குச் சொல்லவே தூதர்களை அனுப்புவதாக இறைவன் குர் ஆனில் நமக்குக் கூறுகிறார்.

**"நாம் அனுப்பிய ஒவ் வொரு தூதரிடமும் நிச்சயமாக என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை. எனவே நீங்கள் என்னையே வணங்க வேண்டும், என்ற (உள் உணர்வை)வஹீயை அறிவிக்காமல் இல்லை (21:25)**

எனவே இச்செய்தியைக் கொண்டு வரும் இறைத்தூதர்களை எதிர்ப்பவர்களுக்கு குர் ஆன் மிகக் கடுமையான வேதனையை வாக்களிக்கிறது. (4:115) குர்ஆனை மெய்ப்பிக்கும் தூதரான Dr. ரஷாத் கலீபா இறைவனை மட்டுமே வணங்கும் படியே மனிதர்களுக்கு அறிவுறுத்தினார். குர்ஆனிலிருந்து இணை வைப்பின் வடிவங்களைத்தெளிவு படுத்தினார், அதன் வகைகளை விவரித்தார். மேலும் அவர் குர்ஆனில் உள்ள இறைவனின் மாபெரும் அற்புதங்களில் ஒன்றான '19' ஆல் ஆன அற்புதக்கணிதக் கட்டமைப்பை உலகுக்கு வெளிப் படுத்தினார். மேலும் அவர் பெயரையும் இறைவன் குர்ஆனில் குறியீடு செய்திருக்கிறார்.

உலகப் புகழ் பெற்ற ஃபுஆத் அப்துல் பாக்கியின் (Fuad Abdul Baqy) குர் ஆன் அட்டவணையில் 320 - ம் பக்கத்தில் ரஷாத் என்ற வார்த்தையின் மூலச் சொற்கள் குர் ஆன் முழுவதும் மிகச் சரியாக '19' முறைகளே இடம் பெற்றுள்ளன என்ற தகவலை நாம் காணலாம். மேலும் ஆதாரங்களை w.w.w. http submission.org என்ற இன்டர் நெட் விலாசத்தில் கண்டு கொள்ளலாம். இறைவன் நாடினால், நமது இதழிலும் அவற்றைத் தொடர்ந்து வெளியிடுவோம்.

எந்த மாதிரியான மனிதர்கள் Dr. ரஷாத் கலீஃபாவை எதிர்ப்பவர்கள்? இதன் விடையாவது: இறைவனை மட்டும் வணங்க விரும்பாதவர்களே! ஏனெனில் Dr. ரஷாத் கலீஃபா பிரசாரம் செய்த ஒரே செய்தி 'இறைவனை மட்டுமே வணங்கிடுங் கள்' என்பதே!

"இறைவனையும் அவர் தூதரையும் எதிர்ப்பார்களே மிகவும் கீழானவர்கள். இறைவன் விதித்துள்ளார்: நானும் என் தூதர்களும் நிச்சயமாக வெற்றி பெறுவோம். இறைவன் மிகவும் சக்தியுடையவர்.அனைத்து வலமையும் உடையவர்" (58:20-21)

# யாரை நம்பப் போகிறோம்?
# அல்லாஹ்வையா, அறிஞர்களையா?

குர்ஆனில் உள்ள 19' ஆல் ஆன அற்புதக் கணிதக் குறியீடு பற்றிய கண்டுபிடிப்புகளை Dr. ரஷாத் கலீஃபா 1974 ம் வருடம் முதல் வெளியிட ஆரம்பித்த போது உலகம் முழுவதும் உள்ள முஸ்லீம்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். அவர் கண்டு பிடிப்புக்களை இலட்சக்கணக்கான பிரசுரங்கள் அச்சடித்து உலகமெங்கும் பரப்பினார்கள். Dr. ரஷாத்தின் கண்டு பிடிப்புக்களை, உலகப் புகழ்பெற்ற இஸ்லாமியப் பிரசாரகர் அஹமத் தீதாத் தொகுத்து ஒரு புத்தகமாக எழுதி வெளியிட்டார். Alquaran The Ultimate Miracle தமிழகத்திலும் M. அப்துல் வஹாப் M.A., - B.T.H. தலைமையில், சென்னையில் கன்னிமாரா ஹோட்டலில், சீத்தா ஸாஹிப் முயற்சியில் அப்புத்தகம் 1985-ம் ஆண்டே வெளியிடப்பட்டு விட்டது.

அதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் உலகை மிகவும் வியப்படையச் செய்தது. உலகப் புகழ்பெற்ற வானவியல் வல்லுனரும், எழுத்தாளருமான Dr. கார்ல் ஸாகன் (Dr. Carl Sagan) இந்த அற்புதத்தை 'மனித சமுதாய வரலாற்றில் இது ஒரு மிக முக்கிய நிகழ்வு' எனவர்ணித்தார். உலகின் மிகச் சிறந்த கணக்கியல் வல்லுநர்கள் வாயடைத்துப் போயினர். நடக்கவே முடியாதது, ஆனால் நடந்திருக்கிறது என்பதை அவர்கள் கண்டுணர்ந்து பிரமித்துப் போயினர். முஸ்லிம் சமுதாயம் 'இது எங்கள் வேதம்' என்பதில் பெருமைக் கொண்டது.

எனினும், Dr. ரஷாத் கலீஃபா அவர்கள் மூலம் ஹதீஸ்கள் மார்க்கமல்ல, வரலாற்றுச் செய்திகளே என்பதையும், பாதுகாக்கப்பட்ட குர்ஆனில் சிதைவுகள் நிகழ்ந்திருப்பதை வெளிப்படுத்தி, அது மெய்யாகவே பாதுகாக்கப்பட்டது தான் என்பதையும் மெய்ப்பித்து, தன்னை இறைவனின் கட்டளைப்படி மெய்ப்பிக்கும் தூதராக அறிவித்தபோது முஸ்லிம் சமுதாயம் வெகுண்டெழுந்தது.

இறைவனுடன் இணைத்து நபியையும் பிற இறையடியார் களையும் துதித்துக் கொண்டும் வணங்கிக் கொண்டும் இருந்த முஸ்லிம் சமுதாயம் இறைவனை மட்டுமே வணங்கிட வேண்டுமென்று Dr. ரஷாத் அறிவித்தபோது அதை ஏற்றுக் கொள்ள மறுத்தது. தாங்கள் கற்பனை செய்து வைத்திருக்கும் சிறப்புத் தகுதிகளும், சக்திகளும் தங்கள் இணையாளர்களுக்கு மெய்யாகவே இல்லை என்ற உண்மைகளை நம்பமறுத்தது. நம்பிக்கைக் கொண்டோம் என்று கூறி விட்டால் போதும், தண்டனைக்குப் பிறகு சொர்க்கம் நுழைந்து விடலாமென்று இஷ்டப்படி வாழ்வதற்கு ஹதீஸ்கள் கொடுக்கும் உரிமையை இல்லை என்ற போது கோபம் கொண்டது. தாங்கள் மிகவும் மேன்மையாக மதிக்கும் நபித் தோழர்களில் சிலர் இறை விரோதிகளாக இருந்தனர், என்ற உண்மைகள் ஆதாரத்துடன் வெளிவந்த போது ஆத்திரம் கொண்டது.

Dr. ரஷாத்தின் பிரச்சாரத்தை முடக்கவும் பொய்ப்பிக்கவும் சிரமங்கள் எடுத்துக் கொண்டது. செலவுகள் செய்தது. ஹதீஸ்களின்

ஓட்டைகளை மூடி மறைக்க முயற்சி செய்தது.

அதில் ஒரு முயற்சியாக அமெரிக்கா - சிக்காகோவில் உள்ள இல்லினாய்ஸ் என்ற இடத்தில் (Dr. ரஷாத் அமெரிக்காவில் டுக்ஸான் என்ற இடத்தில் ' இருந்து தன் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.) உலகெங்கும் உள்ள இஸ்லாமிய அறிஞர்கள் என்று அழைக்கப்படு வோர்கள் ஒன்று கூடி ஒரு மாநாட்டை நடத்தினர். அம்மாநாட்டின் பெயர் 'இறுதி நபித்துவம் மற்றும் ஹதீஸ்களின் முக்கியத்துவம் பற்றிய உலக மாநாடு' என்பதாகும். மாநாட்டின் பெயரிலிருந்தே Dr. ரஷாத் கலீஃபாவை எதிர்ப்பதற்காக கூட்டப்பட்ட மாநாடு இது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது அல்லவா? இம்மாநாட்டில் Dr. ரஷாத்தின் தோழர்களில் ஒருவரான ஈடிப் யுக்ஸல் (EDIP YUKSEL) எழுதிய 'முஸ்லிம் அறிஞர்களுக்கு 19 கேள்விகள்'. - என்ற புத்தகம் விநியோகிக்கப்பட்டது. அதில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் அம்மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்கள் மட்டுமல்ல, இன்று வரை எந்த முஸ்லிம் அறிஞரும் பதிலளிக்க வில்லை . ஏனெனில் அவர்களிடம் பதில்கள் இல்லை என்பதே உண்மை.

இம்மாநாட்டை அவர்கள் கூட்டியதன் நோக்கம், குர் ஆனில் நமக்கு குறிப்பிட்டு காண்பிக்கப் படுகிறது. இறை வேதத்தைச் சிதைப்பதும் அதன் பொருளை மாற்றி, திரித்துக் கூறுவதும், நபி, ரசூல் ஆகிய இரு பதங்களின் பொருள் குறித்து முஸ்லிம் பொது மக்களை குழப்புவதுமே அவர்களின் நோக்கமாகும். (பார்க்க 5:41)

அவர்கள் இறைவனை விடுத்து தங்கள் மத குருமார்களையும் அறிஞர்களையும் கடவுள்களாக ஆக்கிக் கொண்டனர்' (9:31)

முகமது நபிதான் நபிமார்களில் இறுதியானவர் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை . நபி, ரசூல் ஆகிய இரு பதங்களின் பொருள்களையும் இறைவன் அல்குர்ஆன் 3:81 ல் நமக்கு தெளிவாக்குகிறார்.

**"நபிமார்களிடம் இறைவன் உறுதிமொழி எடுத்ததை நினைவு கூறுங்கள். நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுப்பேன்.**

எனவே நபிமார்களிடம் வேதம் கொடுக்கப்படும் என்றும், வேதம் கொடுக்கப்பட்டவர் நபி ஆகிறார் என்றும் - நாம் த அறிந்துக் கொள்கிறோம்.

**' பின்னர் உங்களிடம் உள்ளதை (வேதத்தை) மெய்ப்பிக்க ஒரு தூதர் வருவார்'.**

எனவே இருக்கும் வேதத்தை மெய்ப்பிக்க வருபவர்தூதர் என்பதையும் இறையடியார்களின் நல்லறிவுடையோர் அறிந்து கொள்கி றார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாநாட்டின் மற்றொரு நோக்கம் முஹம்மது இறுதி நபி மட்டுமல்ல, இறுதி தூதரும் அவர்தான் என்று முஸ்லிம்மக்களை ஏமாற்றுவதாகும். ரசூல், நபி ஆகிய இரு பதங்களின் அர்த்தமும் ஒன்றே என்றால் 'இறைவன் ஏன் நமக்கு 33:40 - ல் முஹம்மது தூதராகவும், இறுதி) நபியாகவும் இருந்தார் என்று கூற வேண்டும்? இவ்விரு பதங்களும் ஒன்றே என்றால் இறைவன்

முஹம்மது இறுதி நபியாக இருக்கிறார் என்றால் போதுமே, அதுவே அவர் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்பதை நமக்கு அறிவித்திருக்குமே! இறைவன் தன் வார்த்தைகளை விரயம் செய்வதில்லை என்பதை இவர்கள் அறிந்து கொள்ளக் கூடாதா? நபி, ரசூல் என்ற பதங்களுக்கு இறைவன் கூறும் பொருளை ஏற்றுக் கொள்வதா? அல்லது மனிதன் கூறும் பொருளை ஏற்றுக் கொள்வதா? இறைவன் 30:40 - ல் கூறு கிறார் : 'முஹம்மது உங்களில் ஆண்கள் எவருக்கும் தந்தை இல்லை, அவர் இறைவனின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கிறார்" (33:40).

இன்றைய முஸ்லிம்கள் பயன்படுத்தும் 'காத்தமல் முர்ஸலீன்' (இறுதி தூதர்) என்ற பதம் குர் ஆனில் எந்த இடத்திலும் இல்லை என்று நாம் அறிந்து சொள்ள வேண்டாமா?

யூத அறிஞர்கள் ஈசாவை மறுத்தது போல், கிறித்துவ அறிஞர்கள் முஹம்மதை மறுத்தது போல் இன்றைய முஸ்லிம் அறிஞர்கள் குர் ஆனை - அதை மெய்ப்பிக்கும்தூதரை மறுக்கின்றார்கள். 3:81, 33:7 ஆகிய வசனங்களின் முன்னறிவிப்பின்படி மெய்ப்பிக்கும் தூதரின் வருகை தவிர்க்க முடியாதது என்பதை அவர்கள் நன்கறிந்திருக்கின்றனர். எனவே அதை மறைப்பதற்காக கடும் முயற்சிகள் செய்கின்றார்கள். ஆயினும் இறைவனின் சத்தியம் வென்றே தீரும். மதகுருமார்களையும் (முஃப்திகள்) அறிஞர்களையும் (ஆலீம்கள்) வணங்கிட கூடாதென்று குர் ஆன் நம்மை எச்சரிக்கின்றது.

"அவர்கள் இறைவனை விடுத்து தங்கள் மதகுருமார்களையும், மன அறிஞர்களையும் இரட்சகர்களாக ஆக்கிக் கொண்டார்கள்" (9:31)

ஆம்! இறைவன் கூறுவதை விட்டு விட்டு, நாம் நம்முடைய அறிஞர்களைப் பின்பற்றினால், ஏற்றுக்கொண்டால் நாம் இறைவனை விடுத்து நம்முடைய மதகுருமார்களான. முஃப்திக் களையும், அறிஞர்களான ஆலிம்களையும் வணங்கியவர் களாகவே ஆவோம். இறைவன் கருத்துக்கு மேலாக மனிதர்களின் கருத்துக்களை ஆக்கலாமா? உண்மையும், பொய்யும், நேர்வழியும், வழிகேடும் தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று குர் ஆன் கூறுகிறது.

**"இறைவன் அழகான ஹதீஸ்களை (செய்திகளை) இறக்கி அருளினார்" (39:23)**

அரபி மொழியிலான தெளிவான குர்ஆன் எந்தக் கோணலும் (குழப்பமும்) இல்லாதது என்று குர்ஆன் தன்னை விவரித்துக் கொள்கிறது. நாம் இறைவனை நம்பப் போகிறோமா அல்லது அறிஞர்களை நம்பப்போகிறோமா? முஹம்மத் நபியே இறுதித் தூதர் என்ற மாயையிலிருந்து இந்த முஸ்லிம் சமுதாயம் என்றைக்கு விடுபடும்?

வாய்மையே வெல்லும்
(17:81, 21:18)

**மாறாக, அசத்தியத்திற்கு எதிராக சத்தியத்திற்கு உதவி செய்வதே நம் திட்டம். ஏனெனில் அசத்தியம் அழிய வேண்டியதே. நீங்கள் கூறும் வார்த்தைகளுக்காக உங்களுக்குக் கேடுதான். (21:18)**

# சாத்தான்

## ஒரு மாபெரும் மனோவசியக்காரன்

சென்ற நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட முதல் பகுதியை படித்து அறிந்திருப்பீர்கள். இக்கட்டுரையை முழுமையாக படித்து விட்டு, சைத்தானின் மனோவசியத்திற்கு நம்மையறியாமல் நாம் ஆட்பட்டு விட்டோமா? என்று உங்களை நீங்களே பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இறைவனை மட்டும் வணங்காத, அவர் வார்த்தைகளை மட்டும் பின்பற்றாத, ஷைத்தானால் மனோவ சியம் செய்யப்பட்டவர்கள் விநோதமான முறையில் நடந்து கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் சுய நினைவுடன் தொடர் பற்றவர்களாகி விடுகின்றனர். இறைவனின் வார்த்தைகளுடன் மனிதர் களின் வார்த்தைகளை இணையாக்கியதால் அவர்கள் தத்தம் அறிவையும், மனத்தையும் ஷைத்தானுக்கு அர்ப்பணித்து விடுகிறார்கள். அவர்கள் தங்கள் அறிஞர்களையும், மார்க்க, மதத் தலைவர்களையும் இறைவனு டன் சேர்த்து கடவுளர்களாக ஆக்கிக் கொண்டார்கள். (விருப்பத்துடன் பார்க்க 9:109) ஷைத்தானின் யோசனைகளின்படி அறிவுரைகளின் படி மட்டுமே அவர்கள் உண்மை யுடன், யதார்த்த நிலையுடன் தொடர்பு கொள்வார்கள். யாரிடமா வது குர்ஆனில் உள்ள வசனங்களான, குர்ஆன் தெளிவானது, முழுமையானது. மிகச்சரியானது, விவரிக்கப்பட்டது, ஒரே மார்க்க ஆதாரமானது என்பன போன்ற வசனங்களை நாம் எடுத்துக் காட்டினால் அவர்கள் கோபம் கொள்வதும், கையைப் பிசைவதும், பரபரப்புக் கொள்வதும் நாம் சாதாரணமாகக் காணும் காட்சி, இந்தக்குர் ஆன் கூறும் உண்மை களைப் பார்க்க முடியாமல், ஏற்றுக்கொள்ள முடியாமல் தடுமாறுவர்.

**“இறைவனின் வேதவசனங்களை நீங்கள் பின்பற்ற வேண்டும்”, என்று அவர்களிடம் கூறப்பட்டால், இல்லை , எங்கள் பெற்றோர்கள் செய்ததாக எதை நாங்கள் கண்டோமோ அவற் றையே பின்பற்றுவோம் என்று கூறுகின்ற னர்"** (2:170, 31:21)

இத்தகைய மனிதர்கள், மாபெரும் மனோவசியனான ஷைத்தானுக்குத் தங்களை அர்ப்பணித்து விட்டார்கள் என்பதையும், அவன் அவர்களின் மனத்தையும், பார்வையையும், செவிப்புலனையும், தன் முழுகட்டுப்பாட்டில் வைத்திருக் கிறான் என்பதும் இப்பொழுது நமக்குத் தெளிவாகிறது. ஆக, அவர்களால் சுயமாக எதையும் சிந்திக்கவோ, பார்க்கவோ,

கேட்கவோ முடியாது. குர் ஆனின் வசனங்கள் 17:45, 18:57 ஆகியன நமக்கு இவர்களின் 10 இந்த விநோதமான நடவடிக்கைகள் பற்றி மேலும் விளக்குகிறது. வசனம் 17:45ல் குறிப்பிடப்படும் 'மறைக்கப் பட்ட, பார்க்க முடியாத திரை' என்பது இறைவன் நமக்களித்த குர் ஆனை நம்பாமல், அதில் உள்ள உண்மைகளுக்குக் கட்டுப்படாமல் நடப்பவர்களின் மீது ஏற்படும் மனோவசியம் செய்யப்பட்ட நிலையை குறிப் பிடுகிறது.

கீழே, மனோவசியம் செய் யப்பட்டவர்களின் நிலையை விவரிக்கும் 11 விஷயங்கள் கூறப்பட்டுள்ள. (Hollander, B என்ற மனோவசிய நிபுணர் எழுதிய மனோவசியத்தின் சரித்திரமும், அதன் விளைவுகளும் என்ற புத்தகத்தில் இவ்விஷயங்கள் கூறப் பட்டுள்ளது)

இங்கே ஒவ்வொரு மனோ வசியம் செய்யப்பட்டவரின் விவரங் கள் பற்றிக் கூறும் விஷயத்திற்கும். நிராகரிப்போரின் அதே மாதிரியான நடவடிக்கைகளைக் கூறும் பொருத்தமான குர்ஆன் வசனங்களைத் தந்திருக்கிறோம்.

1. மனோவசியம் செய்யப்பட்டவர் தன்னை மனோவசியப்படுத்திய வனின் யோசனைகளை, வார்த்தை களை உண்மை என்றும், யதார்த்த நிலை என்றும் தயங்காமல் ஏற்றுக் கொள்கிறார். அவர் தனக்குக் கூறப்பட்ட யோசனைகளையோ மனோவசியக்காரனையோ, ஆராய்வதில்லை.

"பூமியில் உள்ள பெரும்பா லோரை நீர் பின்பற்று வீரானால், அவர்கள் உம்மை இறைவனின் வழியை விட்டு விலக்கி விடுவார்கள். அவர்கள் அடிப்படை யில்லாத யூகங்களையே, பின்பற்று கிறார்கள். மேலும் அவர்கள் கற்பனையே செய்கிறார்கள் (6:116)

2. தன்னை மனோவசியம் செய்தவனுக்கு ஏற்ப மனோவசியம் செய்யப்பட்டவர் தன் நம்பிக்கை களையும், யோசனைகளையும் தானே அமைத்துக் கொள்கிறார். "மனித ஷைத்தான்களையும், ஜின் ஷைத்தான்களையும் நாம் நபிமார் களுக்கு விரோதிகளாக ஆக்கியிருக் கிறோம். அவர்கள் அலங்காரமான வார்த்தைகளைக் கொண்ட பொய் களைத் தயாரித்து, ஏமாற்றும் பொருட்டு ஒருவருக்கொருவர் அறிவித்துக் கொள்கிறார்கள். உமது இரட்சகன் நாடினால் அவர்கள் இவ்வாறு செய்திருக்க முடியாது. அவர்களையும், அவர்கள் இட்டுக் கட்டியவற் றையும் நீர் பொருட்படுத்தக் கூடாது. இது (இறைவன் நாட்டப்படி) மறுமையை நம்பாத வர்களின் மனங்கள் அதைக் கேட்டு, உடனே தயாராக அதை ஏற்று, அவர்களின் உண்மையான எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காகவுமே" (6:112-113)

3. மனோவசியம் செய்யப்பட்டவர் தன் சுயநினைவையும், குறிப்பிட்ட அனுபவங்களையும், தன் வாழ்வின் சில கால கட்டங்களை மறந்து விடும்படியும் செய்ய முடியும்.

**"இறைவனை மறந்து விட்டவர்களைப் போல் நீங்கள் இருக்காதீர்கள். எனவே அவர்கள் தங்களையே மறந்து விடும்படி அவர் விட்டு விட்டார். இவர்கள் தாம் தீயவர்கள் (59:19)**

4. உண்மையில் நடக்காத ஒன்றையோ தான் அனுபவிக்காத ஒன்றையோ அனுபவித்தது போல், மனோ வசியம் செய்யப்பட்டவரை நம்ப வைக்க முடியும்.

**"உண்மையில் கேட்காமல் நாங்கள் கேட்டோம் என்று கூறுபவர்களைப் போல் இருக்கா தீர்கள். நிச்சயமாக இறைவனின் பார்வையில் மிகவும் தாழ்ந்தவர்கள் பகுத்தறிய முடியாத செவிடர் களும், ஊமையர்களும் தான்." (8:21-22)**

5. பொய்யான அடிப்படையில், பொய்யான விஷயங்களை இட்டுக்கட்டி மனோவசிய நிலையில் அவர் உளறக்கூடும். அவர் மனோவசிய நிலையிலிருக்கும் வரை, அவரது கண்ணோட்டங்களைத் திருத்த வெளியிலிருந்து நாம் செய்யும் எந்த முயற்சியும் பலனளிக்காது.

**'முதலில் நிராகரித்து விட முடிவு செய்ததால் நாம் அவர்களின் மனங்களையும், பார்வைகளையும் நம் கட்டுப்பாட்டில் வைத்திருக் கிறோம். இன்னும் அவர்கள் வரம்பு மீறல்களில் குருட்டுத் தனமாகத் தவறுகள் செய்ய விட்டு விடுவோம் (6:110)**

**"அவர்களில் சிலர் நீர் கூறுவதைக் கேட்கலாம். ஆனால் செவிடனை உம்மால் கேட்கச் செய்ய முடியுமா? அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்களில் சிலர் உம்மை நோக்கலாம். ஆனால் குருடனை உம்மால் பார்க்கச் செய்ய முடியுமா? அவர்களால் பார்க்கவே முடியாது.**

6. மனோவசியம் செய்யப்பட்ட வருக்கு உண்மையில் ஏற்படும் அனுபவத்தையும் பொய்யானது என்று நினைக்க வைக்க முடியும்.

**"நாம் குற்றவாளிகளின் உள்ளங்களைக் கட்டுப்படுத்து கிறோம். எனவே அவர்களால் இதை நம்பவே முடியாது. அவர்களுக்கு முந்திய தலைமுறை யினரைப் போலவே, வானத்தின் ஒரு வாயிலைத் திறந்து அவர்கள் உண்மையில் அதில் ஏறினாலும் 'நமது பார்வைகள் மயக்கப்பட்டு விட்டன. இது ஒரு மாயத் தோற்றமே. நாம் சூனியத்தால் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்றே அவர்கள் கூறுவார்களஂ. (15:12-15)**

7. மனோவசியக்காரனால், தொடர்ந்த யோசனைகளின் மூலம், மனோவசியம் செய்யப்பட்டவர் தன்

புலன்களை இயக்க முடியாமல் செய்து விட முடியும். உதாரணமாக நல்ல பார்வையுடையவனை மனோவசியம் செய்து அவனைப் பார்க்க விடாமல் செய்து விட முடியும். இது நிராகரிப்பாளர்களின் கண்களுக்கும் வெளிப்படையான உண்மைக்கும் இடையே உள்ள மறைக்கப்பட்டதிரைபோன்றதாகும்.

**''மனிதர்களிலும், ஜின்களிலும் அதிகமானோர் நரகத்திற்கு என்று விதிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்கு புரிந்து கொள்ள முடியாத இதயங்கள் இருக்கும், பார்க்க முடியாத கண்கள் இருக்கும், கேட்க முடியாத காதுகள் இருக்கும். இவர்கள் விலங்குகளைப் போன்ற வர்கள். உண்மையில் அதை விடவும் மோசமானவர்கள். அவர்கள் எதுவுமே தெரியாமல் இருக்கிறார்கள். (7:179)**

8. மனோவசியம் செய்யப்பட்டவர் சுறுசுறுப்பாகவும், பதிலளிக்கக் கூடியவராகவும், ஒரு கருத்தில் முழுமையாக ஒன்றிப் போனவ ராகவும் இருக்கக் கூடும். ஆயினும் மனோவசியக்காரன், ஒரு மனித னுக்கு சில குறிப்பிட்ட விஷயங்களின் உண்மையான அர்த்தத்திற்கு செவி சாய்க்காமல் இருக்கும்படி கட்டளை யிட முடியும். மாபெரும் மனோ வசியக்காரன் தன் கட்டுப்பாட்டின் கீழுள்ளவர்களை மெய்யாகவே குர்ஆனின் வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொள்பவர் போல் பாவனை செய்யும்படி கட்டளை இடுகிறான். ஆனால் உண்மையில் அவர்கள் குர்ஆனுக்கு நேர்மாறாகச்செயல்படு பவார்கள்.

**' 'சிலர் உம்மைக்கவனிப்பது போல் தோற்ற மளிக்கக் கூடும். ஆனால் அவர்கள் விலகியவுடன் அவர் என்ன கூறினார்? என்று கேட்கின்றனர். இறைவன் அவர்கள் இதயங்களில் முத்திரையிட்டு விடுகிறார். எனவே அவர்கள் தங்கள் சுய அபிப்பிராயங்களையே பின்பற்றுகிறார்கள். (47:16)**

9. தான் உணராமலேயே தன் மேல் வலியை ஏற்படுத்திக் கொள்ள மனோவசியம் செய்யப்பட்டவரால் இயலும். ஏற்கனவே உள்ள வலிகளையும் அவரை மறக்கச் செய்ய முடியும்.

தனக்குத் துன்பங்கள் ஏற்படும் போது அவற்றை தனது பொறுமையின் விளைவு என்று எண்ணும்படி ஷைத்தான் தன் கீழுள்ளவர்களை ஏமாற்றுகிறான். மாறாக அவற்றைச்சோதனை என்றோ, தன்னை மட்டும் வணங்கும்படி இறைவன் நினை வூட்டுகிறார் என்பதையோ அவன் அறிந்து கொள்ளாதபடி செய்கிறான். குர்ஆன் முழுமையானது மிகச்சரியானது, விவரிக்கப்பட்டது (6:19, 38, 114) என்பதை ஏற்றுக் கொள்ளாமையால் தனக்கு ஏற்படும் கடுமையான ஆன்மீகக் காயங்களைக்கண்டும் காணாதது போல் குருடனாக இருக்கும்படி செய்து விடுகின்றான்.

**(தொடரும்)**

# ஹதீஸ்களின் உண்மை நிலை

அல்- குர் ஆனை மட்டுமே பின்பற்ற முயற்சிக்கும் போதும், அதைப் பிரச்சாரம் செய்யும் போதும் நாம் கடுமையான கண்டனங்களுக் குள்ளாகிறோம். நபியின் பெயரால் கூறப்பட்ட செய்திகளும் மார்க்க ஆதாரம்தான் என்று கூறும் ஹதீஸ் மற்றும் சுன்னா ஆகியவற்றைப் பின்பற்றுபவர்கள் தான் வழமையாக நம்மைக் கண்டிக்கிறார்கள். அவர்கள் வாதங்களுக்கு குர்ஆனில் எந்த அடிப்படையும் இல்லை. நம்மை மறுப்பதற்காக பொய் கூறவும், உண்மைகளை திரித்துக் கூறவும் அவர்கள் அஞ்சுவதேயில்லை. இவர்களை நாம் பொருட்படுத்தாமல் இறைவனிடம் விட்டுவிட்டு நியாயமான, நடுநிலையான சில சிந்தனை யாளர்கள் எடுத்து வைக்கும் சில வாதங்களை இங்கு நாம் காண்போம்.

(1) விவாதத்திற்குரிய பொருள் களைக் கொண்ட ஸஹீஹான (ஆதாரபூர்வமான) ஹதீஸ்களை மட்டும் தவறென்று காட்டும் நீங்கள், பல்லாயிரக்கணக்கான ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் பொய்தான் என்று எப்படிக் கூறுகிறீர்கள்? இது விரிந்த ஒரு பட்டியலிலிருந்து எடுத்த ஒருசில தகவல்களின் அடிப்படையில் ஒரு முடிவெடுப்பது ஆகாதா? அவற்றில் உண்மைகளே இல்லையா என்ன? (2) எல்லா ஹதீஸ்களையும் மறுக்க வேண்டும், அல்லது எல்லா ஹதீதுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏன் எண்ணு கிறீர்கள்? ஏன். ஒவ்வொரு ஹதீதையும் தனிப்பட்ட முறையில் எடுத்து, நம்மிடம் உள்ள தகவல்களான அறிவிப்பாளர் வரிசை, சரித்திரச் சான்றுகள் இவற்றுடனும், குர்ஆனுடனும் அவற்றை ஒப்பிட்டு ஒரு முடிவு செய்து அதை நாம் பின்பற்றக் கூடாது?

(3) ஹதீதுகளைப் பின்பற்றுவதை நாம் நிறுத்தி விட்டால் நபியின் வாழ்வைப் பற்றியோ, அவர் நடைமுறையைப் பற்றியோ நமக்கு எந்தத் தகவல்களும் இல்லாமல் போய்விடும் குர்ஆனில் நபியின் வாழ்க்கை பற்றி சில தகவல்களே காணப்படுகின்றன. மேலும் குர்ஆன் எவ்வாறு தொகுக்கப்பட்டது என்பதையும் குர் ஆன் நமக்குக் கூறவில்லை . குர் ஆனுக்கு ஆதாரமே ஹதீஸ்கள் தான். அதை மறுத்து விட்டால் குர் ஆனுக்கு வேறு என்ன ஆதாரம்?

**மேற்கண்ட மூன்று கேள்வி களுக்கும் நம்முடைய பதில்கள் இவையே:**

ஏதேனும் ஒரு புத்தகத்தில் பொய்கள் இருக்குமானால்

அப்புத்தகம் நம்பகத் தன்மையை இழந்து விடுகிறது. ஹதீதுகளில் ஏராளமான பொய்கள் காணப்படு கின்றன. நூறு பழங்கள் கொண்ட ஒரு கூடைப்பழம் வாங்குகிறோம். அவற்றில் ஒன்றிரண்டு அழுகியி ருந்தால் அது சுமாரான கூடை. 7 அல்லது 8 பழங்கள் அழுகியிருந்தால் பரவாயில்லை . 80 அல்லது 90 பழங்கள் அழுகியிருந்தால் அந்தக் கூடையை நாம் வாங்குவது புத்தி சாலித்தனமாக ஆகுமா? ஹதீதுப் புத்தகங்களில் காணப்படும் பெரும் பான்மையான ஹதீதுகள் பொய் களே! இது அவர்களும் ஒப்புக் கொள்ளும் ஒரு உண்மையே! புகாரியின் வாககுமூலத்தின் படி அவர் சேகரித்த ஹதீதுகளில் 90 சதவிகிதம் பொய்கள் தான்! பல பொய்யான, குர்ஆனுக்கு முரணான. இட்டுக்கட்டடப்பட்ட செய்திகளை மீண்டும், மீண்டும் ( ஸஹீஹ் ) ஆதாரபூர்வமானது என்று பதியப்ப ட்டிருக்கும் ஒரு புத்தகத்தை நாம் எப்படி நம்ப முடியும்?

இறைவனின் வேதத்தில் திருப்தி அடையாதவர்களுக்கு வேண்டுமானால், ஒவ்வொரு ஹதீதையும் தனிப்பட்ட முறையில் நாம் ஆராய்ந்து, அவற்றைப் பின்பற்றுவது என்பது நல்ல யோசனையாகத் தோன்றலாம். ஆனால் அது உண்மையில் நேரத்தை வீணடிக்கும், தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் முறையாகும். அறிவிப்பாளர் வரிசையில் ஒரு ஹதீதுக்கான ஆதாரம் கிடைக்கவில்லை எனும்போது அது சரியான ஹதீதுதானா என்பதை முடிவு செய்வதில் நமது மனோ இச்சையும், அபிலாஷைகளுமே முன் நிற்கும். இல்லையென்றால் அது சரியான செய்திதான் என்பதற்கு வேறு என்ன ஆதாரம் இருக்க முடியும். குர் ஆனுடன் ஒப்பிட்டு, ஒத்திருந்தால் அதைப் பின்பற்றலாமல்லவா? என்று சிலர் கூறுவர்.

நாம் அவர்களைக் கேட்கிறோம். உண்மையில் இதன் பொருள் என்ன? யார் அந்த ஹதீதை குர்ஆனுடன் ஒப்பிடுவது? யார் அதைகுர் ஆனுக்கு ஒத்திருக்கிறதா அல்லது முரண்படுகிறதா என்பதை முடிவு செய்வது? 'நானே' முடிவு செய்வேன் என்றால் அதை மனிதர்களின் 'நான்', எனும் அகந்தையோ அல்லது மனோ இச்சையோ தான் முடிவு செய்ய வேண்டும். இந்நிலையில் ஹதீதுகள் குர் ஆனுக்கு விளக்கமாக இருக்க முடியாது. மாறாக அது 'நம்முடைய' குர் ஆன் அறிவை உறுதிப்படுத்து வதாகவோ அல்லது நியாயப்படுத்து வதாகவோ மட்டுமே அமையும். மேலும் குர்ஆனில் இல்லாத ஏவல் களையோ விலக்கல்களையோ கூறும் ஹதீதுகளை என்னதான் செய்வது? அவ்வாறு, இல்லையென்றால் 'நான்' நம்பும் ஒரு அறிஞரின் முடிவைப் பின்பற்ற வேண்டும். இது (தக்லீது) கண்மூடிப் பின்பற்றலில் நம்மைக் கொண்டு சேர்க்கும். இறைவன் தன் வேதத்தைக் கூட கண் மூடிக் கொண்டு பின்பற்றக்கூடாது என எச்சரிக்கிறார்.

நேர்வழியானாலும் கண்ணை மூடிக் கொண்டு நடக்க முடியுமா? எந்த அளவாக இருந்தாலும் சரி ஹதீதுகளைப் பின்பற்ற ஆரம்பிப் பவன் கண்ணை மூடிக் கொண்டு யாரையாவது பின்பற்ற வேண்டிய நிலைக்கு ஆளாவது நிச்சயம். இறைவன் நம்மை விழிப்புடன் இருக்கும்படி கூறுகிறார்.

அடுத்து நபியின் வாழ்வைப் பற்றிக்கூறும் பற்பல ஹதீதுகள் நாம் நமது சுயநினைவுடன் ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு உள்ளன. இவை எல்லா ஹதீதுப் புத்தகங்களிலும் ஸஹீஹ் என்றும் அறிவிக்கப்படுகின்றன. அவை ஒன்றுக் கொன்று முரணாகவும் உள்ளன. நபியை முன்னுக்குப் பின் முரணாகப் பேசியவர் போல் சித்தரிக்கின்றன. கன்னா பின்னா வென்று வரிசைப்படுத்தப்பட்ட உண்மையும் பொய்யும் கலந்த செயதிகளிலிருந்து அறிவுரீதியான ஒரு சரித்திரத்தை ஆதாரத்துடன் நாம் பெற முடியாது. இந்த ஹதீதுகளைக் கொண்டு முஹம்மத் நபியைப் பற்றிய முரண்பட்ட பல சித்திரங்களை நாம் உருவாக்க முடியும். ஒவ்வொரு வரும் தான் அறிந்த சில ஹதீதுகளின் அடிப்படையில் (எல்லா ஹதீதுகளையும் அறிந்தவர் எவருமில்லை) தனக்கு விருப்பமானவாறு ஒரு சித்திரத்தை அமைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

நாங்கள் ஹதீதுகளை படிக்கவே கூடாது என்று கூற வில்லை. அவை மார்க்க ஆதாரங் களாகாது என்றே கூறுகிறோம். அவை உண்மையும் பொய்யும் கலந்த வரலாற்றுச் செய்திகளே. அவற்றைப் படிப்பதன் மூலம் அன்றைய அரபு சமுதாயத்தின் கலாச்சாரம், மக்கள் மற்றும் அன்றைய காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள், ஆகியவற்றைப் பற்றி ஓரளவுக்கு, ஓரளவுக்கு மட்டுமே அறிந்து கொள்ள முடியும். நமக்குக் கிடைக்கும் தகவல்களையும், நம்முடைய அறிவையும் பயன் படுத்தி அன்றைய சரித்திரம் பற்றி ஒரு யூகத்தை நாம் கட்டமைத்துக் கொள்ளலாம். ஆனால் அதை இறைவனிடமிருந்தோதூதரிடமிருந் தோ பெற்றது என்று கூறக்கூடாது, கூறவும் முடியாது.

சரித்திரங்கள் என்பது தேர்ந் தெடுக்கப்பட்ட சில சம்பவங்களின் தொகுப்பே என்பதை நாம் மறந்து விட முடியாது. அவை அன்றைய ஆட்சியாளர்களின் தணிக்கைக்கு உட்பட்டது என்பதை யும், ஆட்சியாளர்கள் தங்களுக் கேற்ப அவற்றைச் சிதைக்க முயற்சி செய்திருப்பர் என்பதையும் மறுக்க முடியாது. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றியும், போர்களைப் பற்றியும் ஹதீதுகளில் பற்பல வாக்குமூலங் களை நாம் காண முடிகிறது. சன்னி மற்றும் ஷியா பிரிவினர்களுடைய ஹதீதுப் புத்தகங்களை நாம் பார்த்தால் அவற்றை அறிந்து கொள்ள முடியும்.

ஹதீதுகளின் தேவையை குர்ஆன் அடியோடு நிராகரிக்கிறது.

குர் ஆன் விவரிக்கபப்ட்டது முழுமை யானது, தெளிவானது, நம்பிக்கையா ளர்களுக்கு புரிந்து கொள்ளவும், பின்பற்றவும் இலகுவானது என்று மீண்டும், மீண்டும் இறைவன் அளிக்கும் வாக்குறுதிகளை நாம் பொருட்படுத்தாமல் விட்டு விட முடியாது. ஹதீதுகள் எந்தத் தேவையையும் பூரணமாகப் பூர்த்தி செய்யவும் இல்லை என்பதைச் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் அனைவரும் விளங்கிக் கொள்ள முடியும்.

ஹதீதுகள் ஷைத்தானின் கண்டுபிடிப்புக்களே! ஏனெனில் அவை குர்ஆன் முழுமையானது, தெளிவானது, விவரிக்கப்பட்டது, மேலும் அது மட்டுமே மார்க்க ஆதாரம் என்ற இறைவனின் வார்த்தைகளை மறுக்கிறது. மேலும் ஹதீஸ்கள் முஹம்மத்நபியை குர்ஆனை மட்டும் பின்பற்றாத ஒரு கொடுங்கோலராகச் சித்தரிக்கிறது. தன் பிரியத்திற்குரிய சிறிய தந்தையைக கொன்ற வஹ்ஷியையும் மன்னித்தார் முஹம்மத் நபி என்று கூறும் அதே ஹதீதுத் தொகுப்புகள் வழிகாட்ட அனுப்பப்பட்ட நபியின் ஆடு மேய்ப்பவரைக் கொன்றதற்காக உரைனா, உகைலா ஆகிய இரு கோத்திரங்களைச் சேர்ந்த அனைவ ரையும் கைப்பற்றி, கண்களை நோண்டி எடுத்து, மாறுகால், மாறு கை வெட்டி பாலைவனத்தில் தாகிக்க விட்டுக கொன்றார்கள் (புகாரி 97/ 36) என்றும் கூறுகிறது. இவை இரண்டும் (ஸஹீஹ்) ஆதாரபூர்வ மானவையே. அப்படியென்றால் முஹம்மத் நபி யார்? மன்னிக்கும் மாண்பாளரா அல்லது பழிவாங்கும் கொடுங்கோலரா? சரித்திர சம்ப வங்களைப் பொறுத்தவரை நமக்கு அதில் குர்ஆனில் இல்லாத எந்தப் பாடங்களும் இல்லை. நம் மீட்சிக்குத் தேவையான அனைத்தும் குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் ஹதீது களின் தேவை என்ன? அதன் தேவையைப் பற்றி நம்பகத்தன்மை பற்றி விவாதிக்க நீங்கள் தயாராக இல்லையன்றால் ஹதீதுகளின் பக்கம் மக்களை அழைப்பதை நிறுத்தி விடுங்கள்.

தவிரவும், ஹதீதுகள் ஏதோ ஆதார பூர்வமாகப் பதியப்பட்ட, விஞ்ஞானரீதியில் தீர்க்கமாக சரிபார்க்கப்பட்ட செய்திகள் என்பதைப் போன்ற ஒரு மாயத் தோற்றத்தை முஸ்லிம் உலமாக்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அறிவிப்பாளர்களின் நம்பகத்தன்மை குறித்துப் பல வாதங்கள் எடுத்து வைக்கப்படுகின்றன. பல கற்பனைப் பெயர்கள் ஹதீதுப் புத்தகங்களில் காணப்படுவதாக அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள். ஒரு ஹதீஸ் கலை அறிஞர் ஏற்றுக் கொள்ளும் அறிவிப் பாளரின் நம்பகத் தன்மையை மற்றொரு அறிஞர் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் ஷியா அறிஞர்கள் உங்கள் 'நம்பகமான' அறிவிப்பாளர்கள் அனைவரும் பொய்யர்களே என்று சன்னி பிரிவினரைப் பார்த்துக் கூறு கின் றனர். ஷியா அறிவிப்பாளர்கள் அனைவரும் பொய்யர்களே என்று

சன்னி பிரிவினர் கூறுகின்றனர். 1300 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஒரு ஹதீது அறிவிப்பாளர் நல்லவரா கெட்டவரா என்பதை அறிந்து கொள்ள நீங்கள் வைத்திருக்கும் அளவுகோல்கள் என்ன? அறிவிப் பாளர் நம்பகமானவரா இல்லையா என்று கூறும் அறிஞர்களின் நம்பகத்தன்மை பற்றி எதுவும் கூறுவதில்லையே ஏன்? அவர்களைப் பற்றி யார் நமக்கு அறிவிப்பது? மறதியாளர்கள் அறிவிக்கும் ஹதீதுகளை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை, என்று கூறும் இவர்கள் மறதியில்லாத ஒரு மனிதனைக் காட்ட முடியுமா? லைலத்துல் கத்ர் எனும் புனித இரவு எப்பொழுது என்பதை நபியே மறந்து விட்டார்கள் என்று ஒரு ஹதீதும் பதியப்பட்டிருக்கிறது. இதன் பின்னரும் ஹதீதுகள் நம்பகத்தன்மை உடையவைதான் என்று இவர்கள் கூறுவதை சுயநினைவோடு நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா?

புகாரி அறிவிக்கும் ஹதீதுகளை ஏற்றுக் கொள்ளும் இவர்கள் புகாரியின் நம்பகத்தன்மை பற்றி யோசிக்க வேண்டாமா? புகாரி மர்வான் இப்னுஹகம் என்பவரி டமிருந்து ஒரு செய்தியை அறிவிக்கிறார். ஏனெனில் அவர் நம்பகமானவர், உண்மையாளர் என்று புகாரி கருதுகிறார். ஆனால் ஷியா, சன்னி ஆகிய இருபெரும் பிரிவினருள் உள்ள அறிஞர்கள் பலரும் அவரை ஒரு குடிகாரர், ஊழல்வாதி, கொலைகாரர் என்று கண்டனம் செய்கின்றனர். இவர்தான் முஹம்மத் நபி தன் கரங்களால் எழுதிய குர் ஆன் பிரதியை எரித்தவர் என்றும் ஒரு செய்தி கூறப்படுகிறது. மர்வான் தீயவன் என்றால் புகாரி ஏன் அவர் அறிவிக்கும் ஹதீஸைப் பதிய வேண்டும்? நாம் புகாரியை ஆராய வேண்டாமா?

புகாரி பதிவு செய்திருக்கும் மற்றும் ஒரு ஹதீதை நாம் வேறு வழியில்லாமல் இங்கே குறிப்பிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகி றோம் (ஸுப்ஹானல்லாஹ்)

**"இறைவன் தன்னை அடையாளம் காட்டுவதற்காக நபியிடம் தன் கால்களை விலக்கி தொடையைக் காட்டினார்" (புகாரி 97/24, 10/129)**

இத்தகைய ஒரு செய்தியை ஆதார பூர்வமானது என்று நம்பி அதைப் பதிவு செய்திருக்கும் புகாரி இறைவனைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டாரோ? அடிப்படை இஸ்லாமிய அறிவு இல்லாதவன் கூட இந்தச் செய்தியை நம்ப மாட்டான் எனும் போது புகாரியின் இஸ்லாமிய அறிவு எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? ஆயினும் இந்த புகாரியின் புத்தகம் இவர்களால் குர் ஆனுக்கு இணையா கவும், விளக்கமாவும், கருதப்படு கிறது. புகாரியை நாம் ஆராய்ந்து, நிராகரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமல்லவா?

# இலக்குகளும்-முன்னுரிமைகளும்

மனிதர்கள் அனைவரும் ஒரு இலக்கை நிர்ணயம் செய்து கொண்டு, அதனை நோக்கி பயணம் செய்தவர் களாகவே உள்ளனர். அதில் சில, குறைந்தகாலத்தில் அடையக் கூடிய இலக்குகளாகவும் (Target) சில நீண்டகால இலக்குகளாகவும் உள் ளது. குறைந்தகால இலக்குகளுக்கு உதாரணமாக, பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவனை எடுத்துக் கொண்டால் அவனுடைய குறிக்கோள் அல்லது இலக்கு, அந்தத் தேர்வில் வெற்றி பெறுவதில் தான் இருக்கிறது. அது முடிந்த உடன், அவனது அடுத்த இலக்கு அடுத்த தேர்வை நோக்கி உள்ளது. அந்த நோக்கத்தை அடைய அவன் சிரமங்களையும் மேற்கொள்கிறான். இவ்வாறு இலக்குகளை மாறிமாறி தேர்ந்தெடுத்துக்கொண்டு, ஒவ் வொரு மனிதர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

சிலர் மிகப்பெரிய அந்தஸ்த்தை தனது இலட்சியமாகக் கொண்டு, அதற்காக வெகுநாள் உழைப்ப வர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு மனிதர்களும் தாங்கள் தேர்ந்து எடுத்துக் கொண்டு, அதற்காக உழைத்து, அதில் வெற்றியும் பெறக்கூடிய நேரத்தில், அவர்களுக்கு இந்த உலக வாழ்க்கைக்கு தேவையான அனைத்தும் கிடைப்பதில்லை. மாறாக, அந்த நேரத்தில் அல்லது சிறிது நாள் கிடைக்கும் மகிழ்ச்சி மட்டும்தான்.

பொதுவாக யாரிடத்தில் நாம் கேட்டாலும் அவர்களிடத்தில் இருந்து வெளிப்படும் பதில், ' 'நான் **நிம்மதியாக இருக்க வேண்டும். எந்தவித சோர்வும், களைப்பும்** இல்லாது இருக்க வேண்டும்" என்பதுதான். வேலை தேடிச் செல்லும் ஒருவரின் எதிர்பார்ப்பு, வேலை கிடைத்து விட்டால் நிம்மதியாக இருக்கலாம் என்பது தான். ஆகவே, மனிதர்கள் ஒவ்வொருவரின் எண்ணங்கள் இவ்வாறுதான் உள்ளது. ஆனால் அவர்கள் தேர்ந்து எடுத்துக் கொள்கின்ற வழிகள் மாறாக உள்ளன. குறைவான மகிழ்ச்சிகளைக் கொடுக்கும் இலக்கு களை மாறி, மாறி தேர்ந்து எடுத்துக் கொள்கின்றனர். நிறைவான மகிழ்ச்சியை தரக்கூடிய இடத்தை இலக்காக தேர்ந்தெடுத்துக் கொள்வ தில்லை .

இவ்வுலக வாழ்க்கையில் அந்த நிம்மதியை தேடிக் கொள்ள இயலாது. அந்தநிறைவான நித்திய மகிழ்ச்சியை தரக்கூடிய இடம் இறைவன் வாக்களிக்கும் சுவனப திதான்.

இறைவன் தனது நேயர்கள், தான் அன்பு செலுத்துபவர்கள் பற்றி,

"நிச்சயமாக, அல்லாஹ்வின் நேயர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை . அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்" 10:62(அல்குர்ஆன்)

நம்முடைய அச்சம், களைப்பு நீங்க வேண்டும் என்றால், அல்லாஹ் வின் விருப்பத்திற்கு உரிய வர்களாக மாற வேண்டும். அதற்கு நாம் அல்லாஹ் காட்டித் தந்த வழியில் நடக்க வேண்டும்.

"எவர்கள் நம்முடைய வழியில் நடக்க முயல்கிறார்களோ, நிச்சய மாக நாம் அவர்களுக்கு நம் முடைய வழியில் நடப்பதற்கு உதவி செய்யவோம். அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறார்"
29:69 (அல்குர்ஆன்)

"நிச்சயமாக இந்த உலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும் இன்றி வேறில்லை. மேலும் பெருமை அடித்துக் கொள்வதும், செல்வங்களையும் குழந்தை களையும் பெருக்குவதேயாகும். இது மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும். மழை பெய்வதினால் உண்டாகும் பயிர் நிராகரிப் பவர்களை ஆனந்தப்படுத் துகிறது. ஆனால் அந்த பயிர் பயன்படுத்த முடியாத கூளங்களாகவும், அடிக்கும் காற்றால் அப்புறப்படுத்தப் படுவதாகவும் அமைகிறது. மறுமையில் வேதனை அல்லது மன்னிப்பு அல்லாஹ்வின் ஒப்புத லின்படி நடக்க இருக்கிறது. இந்த உலக வாழ்க்கை சொற்பசுகமே அன்றி வேறில்லை ". 57:20 (அல்குர் ஆன்).

இவ்வுலக வாழ்க்கையில் கிடைக் கும் பொருட்களெல்லாம் அழியக் கூடியவை. எனவே இந்த உலக வாழ்க்கையில் இலட்சியமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது அல்லாஹ் விரும்பியபடி நடந்து கொள்ளும் வாழ்க்கையைத்தான்.

"எவர்கள் இந்த அழியக்கூடிய வாழ்க்கையை இலக்காக எடுத்து அதற்கு முன்னுரிமை கொடுக்கிறார் களோ, நாம் அவர்களுக்கு அதை விரைவாக கொடுத்து விடுவோம். மேலும் நாம் அவர்களை நரகத்தில் புகுத்துவோம். என்றென்றும் அதில் பழிக்கப்பட்டவர்களாக இருப்பர்.

எவர்கள் மறுமையை இலக்காக்கி இறை நம்பிக்கை கொண்டும் நற்கருமங்கள் செய்தும் வாழ்கிறார் களோ, அவர்கள் செய்யும் முயற்சிக்கு நற்கூலி வழங்கப்படும்" 17:18-19 (அல்குர்ஆன்)

"இவ்வுலக வாழ்க்கை விளை யாட்டும் வேடிக்கையுமின்றி வேறில்லை. ஆனால், மறுமையோ உண்மையான வாழ்க்கையாக உள் ளது. அவர்கள் அறிந்திருந்தால்" 29:64 (அல்குர்ஆன்)

இதைத்தான் பைபிளும் பிரதி' பலிக்கிறது.

"இறைவன் = சொல்கிறார்: பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்ப வர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28)

இம்மையிலும், மறுமையிலும் மகிழ்ச்சி வேண்டும் என்பது நாம் இறைவனை மட்டும் அடிபணிந்து வாழ்வதை பொறுத்தே அமைகிறது.

' ' உங்களில் எவர் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின் றார்களோ, அவர்களை அவர்களுக்கு முன்னிருந்தோரை ஆட்சியா ளர்களாக ஆக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக ஆக்கி வைப்பதாகவும், இன்னும் அவர் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும் ,அவர்களுடைய அச்சத்தை திட்டமாக அமைதியைக் கொண்டு, மாற்றி விடு வதாகவும் இறைவன் வாக்களித் திருக்கிறார். ஏனெனில் இது அவர்கள், "என்னை மட்டும் வணங்கியதற் காகவும், எனக்கு இணைவைக்காமல் இருந்ததற் காகவுமே , ''24: 55 (அல்குர்ஆன்)

ஆகவே, நாம் நம்முடைய ஓஒவ்வொரு நடவடிக்கைகளிலும் (முடிவுகளிலும் மறுமை வாழ்வின் நிரந்தர இன்பமயமான வாழ்க்கையை இலக்காகக் கொண்டு வாழ வேண்டும்.

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

اَللّٰهُ يَسْتَهْزِئُ بِهِمْ وَيَمُدُّهُمْ فِىْ طُغْيَانِهِمْ يَعْمَهُوْنَ

اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الضَّلٰلَةَ بِالْهُدٰى فَمَا رَبِحَتْ تِّجَارَتُهُمْ وَمَا كَانُوْا مُهْتَدِيْنَ

مَثَلُهُمْ كَمَثَلِ الَّذِى اسْتَوْقَدَ نَارًا فَلَمَّآ اَضَآءَتْ مَا حَوْلَهٗ ذَهَبَ اللّٰهُ بِنُوْرِهِمْ وَتَرَكَهُمْ فِىْ ظُلُمٰتٍ لَّا يُبْصِرُوْنَ

صُمٌّ بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَرْجِعُوْنَ

اَوْ كَصَيِّبٍ مِّنَ السَّمَآءِ فِيْهِ ظُلُمٰتٌ وَّرَعْدٌ وَّبَرْقٌ يَجْعَلُوْنَ اَصَابِعَهُمْ فِىْٓ اٰذَانِهِمْ مِّنَ الصَّوَاعِقِ حَذَرَ الْمَوْتِ وَاللّٰهُ مُحِيْطٌ بِالْكٰفِرِيْنَ

## Sura 2: The Heifet (Al-Baqarah)

15. God mocks them, and leads them on in their transgressions, blundering.

16. It is they who bought the straying, at the expense of guidance. Such trade never prospers, nor do they receive any guidance.

17. Their example is like those who start a fire, then, as it begins to shed light around them, God takes away their light, leaving them in darkness, unable to see.

18. Deaf, dumb, and blind; they fail to return.

19. Another example: a rainstorm from the sky in which there is darkness, thunder, and lightning. They put their fingers in their ears, to evade death. God is fully aware of the disbelievers.

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

15. கடவுள் அவர்களைக் கேலி செய்கின்றார், மேலும் அவர்களுடைய வரம்புமீறல்களில் பெருந்தவறுகள் செய்தவர்களாக, அவர்களைத் தொடர்ந்து செலுத்துகின்றார்.

16. அவர்கள்தான் வழிகாட்டலை விலை கொடுத்து வழி தவறுதலைக் கொள்முதல் செய்து கொண்டவர்கள். இத்தகைய வணிகம் ஒருபோதும் விருத்தியடைவதில்லை, அன்றியும் அவர்கள் எந்த வழிகாட்டலையும் பெற்றுக் கொள்வதில்லை.

17. அவர்களுடைய உதாரணம் ஒரு நெருப்பை மூட்டியவர்களைப் போன்றது, பின்னர், அவர்களைச் சூழ்ந்து அது ஒளி சிந்தத் துவங்குகையில், கடவுள் அவர் களுடைய ஒளியை எடுத்து விடுகின்றார், பார்க்க இயலாதவர்களாக, அவர்களை இருள்களில் விட்டுவிடுகின்றார்.

18. செவிடர்கள், ஊமையர்கள், குருடர்கள், அவர்கள் திரும்புவதற்குத் தவறி விடுகின்றனர்.

19. மற்றொரு உதாரணம்: விண்ணிலிருந்து இருள்களும், இடியும் மின்னலும் கொண்ட தொரு புயல் மழை. மரணத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக, அவர்கள் தங்களுடைய காதுகளில் தங்களுடைய விரல்களை வைத்து அடைத்துக் கொள்கின்றனர். நம்பமறுப்பவர் களைக் கடவுள் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

يَكَادُ الْبَرْقُ يَخْطَفُ اَبْصَارَهُمْ كُلَّمَآ اَضَآءَ لَهُمْ مَّشَوْا فِيْهِ وَاِذَآ اَظْلَمَ عَلَيْهِمْ قَامُوْا وَلَوْ شَآءَ اللّٰهُ لَذَهَبَ بِسَمْعِهِمْ وَاَبْصَارِهِمْ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

20. The lightning almost snatches away their eyesight. When it lights for them, they move forward, and when it turns dark, they stand still. If God wills, He* can take away their hearing and their eyesight. God is Omnipotent.

20. அம்மின்னல் கிட்டத்தட்ட அவர்களுடைய கண்பார்வையைப் பறித்து விடுகின்றது. அவர்களுக்காக அது ஒளிரும்போது, அவர்கள் முன்னே நகர்கின்றார்கள், ஆனால் அது இருளாக மாறும்போது அவர்கள் அசை வற்று நின்று விடுகின்றார்கள். கடவுள் நாடினால், அவர்களுடைய செவிப்புலனையும் கண்பார்வையையும் அவர்* எடுத்துவிட இயலும். கடவுள் சர்வசக்தியுடையவர்

يَاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

21. O people, worship only your Lord - the One who created you and those before you - that you may be saved.

21. மனிதர்களே, உங்களுடைய இரட்சகரை மட்டும் வழி படுங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னர் இருந் தவர்களையும் படைத்த அந்த ஒருவரை நீங்கள் காப்பாற்றப்படும் பொருட்டு.

الَّذِىْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ فِرَاشًا وَّالسَّمَآءَ بِنَآءً وَّاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ مِنَ الثَّمَرٰتِ رِزْقًا لَّكُمْ فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا وَّاَنْتُمْ تَعْلَمُوْنَ

22. The One who made the earth habitable for you, and the sky a structure. He sends down from the sky water, to produce all kinds of fruits for your sustenance. You shall not set up idols to rival God, now that you know.

22. பூமியை உங்களுக்கு வசிக்கத்தக்கதாகவும், வானத்தை ஒரு கட்டுமானமாகவும் ஆக்கிய அந்த ஒருவர். உங்களுடைய ஊட்டத்திற்கென அனைத்துக் கனிவர்க்கங்களையும் விளைவிப் பதற்காக, விண்ணி லிருந்து தண்ணீரை அவர் இறக்கி அனுப்புகின்றார். இப்போது நீங்கள் அறிந்திருப்பதால், கடவுள்-க்குப் போட்டியாக போலித்தெய்வங்களை நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டாம்.

## அத்தியாயம் 2 அல்பகறா (பசுங்கன்று) பின்குறிப்பு

**(சென்ற இதழின் வெளிவந்த பின் குறிப்பின் தொடர்ச்சி)**

தொடர்புத் தொழுகைகள் ஒரு நாளைக்கு ஐந்து முறை விதிக்கப் பட்டிருப்பதால் அவை நம் ஆன்மாவுக்கு முக்கிய ஊட்டமாக உள்ளது. இஸ்லாத்தின் மற்ற முக்கியக் கடமைகளைப் போலவே தொழுகையும் இப்றாஹீம் நபிக்கே முதலில் அருளப்பட்டது. (21:73, 22:78) குர் ஆன் அருளப்படுவதற்கு முன்னரே தொடர்புத் தொழுகை பழக்கத்தில் இருந்த போதும், ஐந்து வேளைகளும் குர்ஆனில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. (24:58, 11:114, 17:78, 2:238)

* 2:3 இறைவன் தன்னைப் பன்மையில் குறிப்பிடும் போது, மற்றவர்கள் குறிப்பாக வானவர்கள் அதில் ஈடுபடுத்தப்படு கிறார்கள். இறைவன் மூஸாவிடம் பேசும் போது ஒருமையே பயன்படுத்தப்படுகிறது. (20:12-14)

* 2:4 முந்திய வேதங்ளில் கடுமையான சிதைவுகள் ஏற்பட்டு விட்டாலும், இறைவனின் சத்தியம் அதில் இன்னமும் காணப்படுகிறது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இன்னும் இறைவனுக்கு மட்டுமே கலப்பின்றி வணக்கத்தை அர்ப்பணிக்க வேண்டும் என்றே ஏவுகின்றன. உபாகமம் 6:4-5, மார்க் 12:29-30) அதில் உள்ள சிதைவுகளும் எளிதில் அடையாளம் காணப்படக் கூடியவையாகவே உள்ளன.

* 2:6-7. இறைவனை மறுக்க முடிவு செய்பவர்கள் அவ்வழியிலேயே தொடர்ந்து செல்ல உதவி செய்யப்படுகின்றனர். இந்த முடிவில் அவர்கள் இருக்கும் வரை எந்த ஆதாரத்தையும், வழிகாட்டுதல்களையும் காண முடியாதவாறு அவர்கள் இறைவனால் தடுக்கப்பட்டு விடுகின்றனர். அழிவை ஏற்படுத்தும் இம்முடிவின் விளைவுகள் வசனம் 7-ல் கூறப்படுகிறது.

*2:20 அவன், அவள் (He, She) என்பது அரபியில் பால்களை மட்டும் குறிக்கும் சொல் என்று கருத முடியாது.

### கண்ணியம் இறைவனுக்கே!

அறிந்து கொள்க! கண்ணியம் எல்லாம் இறைவனுக்கே உரியது (35:10) என்ற வசனத்தின் அடிப்படையில் இறைவனை அவன் என்று குறிப்பதைவிட அவர் என்று குறிப்பிடுவது சிறந்தது. எனவே இவ்விதழில் இறைவனைக் குறிப்பிடும் இடங்களில் அவன்' என்ற சொல்லுக்குப் பதில் 'அவர்' என்று குறிப்பிடப்படுகிறது.

## திருத்தம்

சென்ற இதழில் வெளியான குர் ஆன் மொழி பெயர்ப்பின் 2:13-வது வசனத்தில் 'மூடர்கள்' என்ற வார்த்தை விடுபட்டுள்ளது. கீழ்க்கண்டபடி சரியான மொழி பெயர்ப்பைப் படித்துக் கொள்ளவும்.

"நம்பிக்கை கொண்ட மனிதர்களைப் போல் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் மூடர்கள் நம் பிக்கை கொண்டது போலவா நாங்கள் நம்பிக்கை கொள்வோம்? என்று அவர்கள் கூறுகிறார்கள் உண்மையில் அவர்கள்தாம் மூடர்கள் ஆனால் அவர்கள் அறிய மாட்டார்கள்." (2:13)

# இறைவனின் முத்திரை - 19

அல்குர் ஆன் முழுமையும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதக் கணிதக்கட்டமைப்பில் அமைக்கப் பட்டிருப்பது குறித்த சில தகவல்களை நமது முந்தைய மூன்று இதழ்களிலும் கண்டோம். அவ்வற் புதக் கட்டமைப்பு எவ்வாறெல்லாம் மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக வும், குர் ஆனில் ஒரு எழுத்தையோ அல்லது எண்ணையோ மாற்றி விட முடியாதபடி பாதுகாப்பதாகவும் இருக்கிறது என்பதை அறிவுடை யோர் நிச்சயம் புரிந்து கொள்ள முடியும். இறைவனிடத்தில் மிகவும் கெட்டவர்களான சிந்திக்காத செவி டர்களுக்கும், ஊமையர்களுக்கும் மட்டுமே இறைவனின் குரல் கேட்காமல் போகும். (8:55)

உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காண முடியாத, மனிதன் இதுவரை சிந்தித்தே பார்த்திராத ஓர் அற்புத அமைப்பில் அல்குர்ஆன் அமைக்கப்பட்டிருக் கிறது. குர் ஆனில் உள்ள ஒவ்வொரு விஷயமும், ஆம்! ஒவ்வொரு விஷயமும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட அற்புத அமைப்பில் '19' என்ற எண்ணைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக அதன் அத்தி யாயங்களின் எண்ணிக்கை 114 அதாவது 19X6 குர்ஆனில் 9-வது அத்தியாயமான 'பராஅத்' பிஸ்மி கொண்டு ஆரம்பமாகவில்லை. எனவே அது 8-வது அத்தியாயத்தின் தொடர்ச்சிதான் என்று வாதிடும் சில முஸ்லீம் மேதாவிகளின் கருத்தை இறைவன் தவறெனக் காட்டுகிறார். மேலும் இவர்களாக ஜுஸ்வுகள் - 30 என்றும், மன்ஜில்கள் -7 என்றும் பிரித்து வைப்பதைத் தவறென்று உணர்த்துகிறார். அதன் மேல் 19' இருக்கிறது. (74:30) ஆதலால் குர் ஆனில் உள்ள அத்தியாயங்களின் எண்ணிக்கை 114 தான் என்று உறுதிப்படுத்தப்படுகிறோம்.

மேலும் குர்ஆனின் அத்தியாயங்களின் பெயர்களில் 19 மட்டுமே அலிஃப் என்ற அரபியின் முதல் எழுத்து கொண்டு ஆரம்பிக்காது. மீதமுள்ள 95 அத்தியாயங்கள் (1985) 'அலீஃப் (அ) என்ற எழுத்துக் கொண்டு ஆரம்பிக்கும்! சில அத்தியாயங்களின் பெயர்களை இவர்கள் மாற்றி வைத்திருக்கிறார் கள். உதாரணமாக 'பனீ இஸ்ராயில்' (இஸ்ராயீலின் சந்ததிகள்) என்ற அத்தியாயத்தின்பெயரை அல் இஸ்ரா என்றும் 'பரா அத்' என்ற 9-வது அத்தியாயத்தின் பெயரை அத்தவ்பா என்றும், 40 - ம் அத்தியாயமான (G h a f e r மன்னிப்பவர்) (G ) காஃபிர் என்பதன் பெயரை முஃமின் என்றும், 41 ம் அத்தியாயமான ஃபுஸ் ஸிலத் என்பதன் பெயரை ஹாமீம் அஸ்ஸஜ்தா என்றும், 76-ம் அத்தியாயமான அல்இன்ஸான் என்பதை அத்தஹ்ர் என்றும் பெயரிட்டு இரண்டுமே அவ்வத்தி யாயங்களின்

பெயர்கள் தான், இருவிதமாகவும் அவை அழைக்கப்பட்டன என்று ஏமாற்றுவதைக் கண்டித்து குர்ஆனின் அத்தியாயங்களுக்கு அவர் இட்ட பெயர்களை அடையாளம் காட்டுகிறார்.

அதன்மேல் 19' இருக்கிறது. (74:30) அத்தியாயங்களுக்கு மனிதர்கள் வைத்த பெயரைப் பொருத்தினால் அது 19'ன் கட்டமை ப்பால் அடையாளம் காட்டப்படும்.

அடுத்து, அத்தியாயங்களின் எண்களும், வசனங்களின் எண்களும் அல்லா ஹ் வால் கொடுக்கப்பட்டது தான் என்பதை '19' நமக்குக் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, குர்ஆன் முழுவதும் 'ஸலாத் (தொடர்புத் தொழுகை) என்ற வார்த்தை 67 முறை இடம் பெறுகிறது. அந்த 67 வசனங்களின் அத்தியாயங்கள், வசனங்கள் ஆகியவற்றைக் கூட்டி னால் வரும் தொகை 4674 அல்லது 19x 246!

குர்ஆனின் அத்தியாயங்களுக்கும் வசனங்களுக்கும் எண்கள் இட்டவர் இறைவனே என்பதையே இது காட்டுகிறது. அதன்மேல் 19' இருக்கிறது என்று 74:30ல் கூறுகிறாரல்லவா?

குர்ஆனின் வசனங்கள் எத்தனை என்பதிலும், சில, குறிப்பிட்ட வசனங்கள் எங்கு முடிகிறது. என்பதிலும் முஸ்லீம் அறிஞர்கள் மத்தியில் உள்ள குழப்பங்களை பற்றி பின் வரும் இதழ்களில் காண்போம். ஏனெனில் இவற்றிலும் மாறுபாடான பல்வேறு ஹதீஸ் அறிவிப்புகள் உள்ளன.

இப்போது நாம், குறிப்பிட்ட சில சொற்றொடர்களும் குர்ஆனில், 19 ஆல் கட்டமைக்கப் பட்டுள்ளது குறித்துப்பார்ப்போம். உதாரணமாக மிக முக்கிய அறிக்கையான 'லா இலாஹ இல்லா ஹுவ' என்ற வாசகம் சரியாக 19 அத்தியாயங்களில் இடம் பெற்றுள்ளது.

குர்ஆனில் இடம் பெறும்பற்பல வார்த்தைகள் 19ன் பெருக்குத் தொகையாகவே இடம் பெறுகிறது. எடுத்துக்காட்டாக 'அர்ரஹ்மான் (மிக்க அருளாளர்) என்ற இறை நாமம் சரியாக 57 முறைகள் இடம்பெற்றுள்ளது. 57=19x 3 ! அதன் மேல் 19 இருக்கிறது!

குர்ஆனில், சில குறிப்பிட்ட எழுத்துக்கள் (உதாரணமாக அலிஃப், லாம், மீம்) 19ஆல் கட்டப்பட்டுள்ள விதத்தை நமது இரண்டாவது இதழில் கண்டோம். இங்கே மேலும் ஒரு தகவலைப் பார்ப்போம். குர்ஆனில் 'ஸாத்' (ஸ) என்ற எழுத்தை முத்திரையாகக் கொண்டு துவங்கும் அத்தியாயங்கள் மூன்று. அவை 7ம் அத் அலிஃப், லாம், மீம், ஸாத், 19ம் அத். காஃப், ஹா, யா, ஐன், ஸாத், மற்றும் 38ம் அத். 'ஸாத். இம்மூன்று அத்தியாயங்களிலும் இடம் பெறும் ஸாத் என்ற எழுத்தின் எண்ணிக் கைகள் முறையே 97+26 +29=152 அல்ல து 19x8 !

7வது அத் 69-ம் வசனத்தில் 'பஸ்ததன்' என்ற வார்த்தையில் ஸீன் என்ற எழுத்தை மாற்றி ஸாத் என்று எழுதியதை இந்த அமைப்பும் காட்டிக் கொடுக்கிறது. அங்கு 'ஸாத்' இருந்திருந்தால் இம்மூன்று அத்தியா யங்களிலும் இடம்பெறும் ஸாத் என்ற எழுத்தின் கூட்டுத் தொகை 153 ஆகி இருக்கும். இது 19' ன் பெருக்குத்

தொகை அல்ல! ஆனால் இறைவன் கூறுகிறார்: 'அதன் மேல் 19 உள்ளது! எனவே இம்முஸ்லிம் அறிஞர்கள் என்றழைக்கப்படு வோரின் குட்டும் வெளிப்பட்டது!

இவ்வாறாக குர்ஆனின் ஒவ்வொரு விஷயமும், அதன் உள்ளடக்கத்திற்கு உட்பட்டும் அதற்கு அப்பாற்பட்டும் நேரடியாகவும், பின்னிப் பிணைந்தும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில், அற்புத மான விதத்தில் அமைக்கப்பட் டுள்ளது. (இதுவரை கூறப்பட்டுள்ள பல தகவல்களை ஃபுஆத் அப்துல் பாகியின் உலகப் புகழ்பெற்ற குர்ஆன் அட்டவணையில் சரி பார்த்துக்கொள்ளலாம்)

குர்ஆனின் எழுத்து வடிவத்தில் மட்டுமல்ல, அதன் ஒலி வடிவத்திலும் அது 19 ஆல் கட்டப்பட்டுள்ளது! உதாரணமாக 'சூரா அல்ஃபாத்திஹா' என்ற அன்றாடப் ப்ரார்த்தனையை நாம் 'பிஸ்மி.... யிலிருந்து ஓதினால் நம் உதடுகள் சரியாகப் 19 முறைதான் ஓட்டும்! அரபி எழுத்துக்களில் 'பே' (ப), 'மீம் (ம) ஆகிய இரண்டை உச்சரிக்கும் போது மட்டும் உதடுகள் ஒட்டும். 'அல்ஃபாத்திஹாவில் 15 மீம் (M) 4 பே (B ) எழுத்துக்கள் இடம்பெறுகின்றன! இதில் மனிதர்கள் சேர்த்த ஆமீன்' என்ற வார்த்தையைச்சொன்னால் இருபது முறை நமது உதடுகள் ஒட்டி, இறைவன் அமைத்த 19' என்ற அற்புதக் கட்டமைப்பு மீறப்படுகிறது. 'அதன் மேல் '19' உள்ள து!

இவ்விதம் கற்பனைக் கெட்டாத விதங்களில் எல்லாம் குர்ஆன் முழுதும் 19' என்ற எண்ணைக் கொண்டு கட்டமைக்கப் பட்டுள்ளது. முந்தைய வேதங்களி லும் '19' என்ற எண்ணால் அமைக்கப்பட்ட அற்புதக் கட்ட மைப்பு இருந்தது என்ற தகவலை இங்கே தெரிவிக்க விரும்புகிறோம். அதற்கான ஆதாரங்களும் பின்வரும் இதழ்களில் வெளியிடப்படும்.

இறை வேதங்கள் மட்டுமல்ல, ப்ரபஞ்சம் முழுவதும் இறைவனின் கையொப்பமான '19' காணப்படு கிறது. சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஏராளமான விஞ்ஞான உண்மைகள் மூலம் இவ்விஷயம் உறுதிப்படுத் தப்படுகிறது.

1. சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் 19' வருடங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட ஒரு நேர்க்கோட்டில் சந்திக்கின்றன. (பார்க்க Encyclopedia Judaica )

2. புகழ்பெற்ற 'ஹாலி' எனும் வால் நட்சத்திரம் நம் சூரிய மண்டலத்திற்கு 76 வருடங்களுக்கு ஒருமுறைதான் வரும். 76=19x4.)

3. மனித உடம்பில் 209 எலும்புகள் உள்ளன. 209=19x11. இது மனித சமுதாயத்தின் மேல் இறைவன் இட்ட முத்திரை போன்றதாகும்.

4. T.W.Sadler எழுதிய Langman's Medical Embryology) என்ற புத்தகம் மருத்துவக்கல்லூரிகளின் மாரிகளின் பாடநூல் ஆகும். அதன் ஐந்தாம் பதிப்பின் பக்கம் 88-ல் நாம் கீழ்க்கண்ட தகவல்களைக்காண்கி றோம்

"பொதுவாக ஒரு முழு வளர்ச்சி அடைந்த கருவின் கர்ப்பக்காலம் கடைசி மாதவிடாயிலிருந்து 280 நாட்கள் அல்லது 40 வாரங்கள் என்று கருதப்படுகிறது. ஆனால் மிகச் சரியாகக் கூறினால் கருத்தரித்தலிருந்து 266 நாட்கள் அல்லது 38 வாரங்கள். 266 மற்றும்

38 ஆகிய இரு எண்க ளும் 19-ன் பெருக்குத் தொகையே!

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி கலிலியோ (Galileo) ஒருமுறை கூறினார். 'கணக்கு எனும் மொழியிலேயே இறைவன் பிரபஞ்சம் முழுமையையும் அமைத்து இருக்கிறார். ஆம். நிச்சயம் கணக்கு எனும் மொழி அனைத்து மனிதர் களுக்கும் பொதுவானது ஆகும். இந்தியாவிலும் 10+9 என்பது 19 தான். அமெரிக்காவிலும் 19தான் இன்னும் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் அது 19 தான். ஃபிரான்ஸிலும், ஜெர்மனியிலும், ரஷ்யாவிலும் கூட அதே 19 தான்! இவ்வாறாக, உலகப் பொதுமறையான அல்குர்ஆனுக்கு, உலகப் பொதுமொழியான கணக்கியலில் நிரூபணங்கள் கொடுக்கப்பட் டுள்ள து.

அல்லாஹ்வின் சொல்லான அல்குர்ஆனுக்கு மனிதர்கள் சொல்லான ஹதீஸ்கள்தான் ஆதாரம் என்று எண்ணுவோருக்கு 19 என்ற தன் முத்திரையால், கையொப்பத்தால் இறைவன் பதிலடி கொடுக்கிறார். தான் பாதுகாப்பதாகக் கூறிய வேதத்தைப் பாதுகாக்க மனிதர்க ளிடம் எந்தத் தேவையுமற்றவர் இறைவன்! நாம்தான் இறைவனிடம் தேவையுடையவர்களாக உள்ளோம். இறைவனுக்கு நம்மிடம் எந்தத் தேவையுமில்லை.

இத்தனை ஆதாரங்களுக்குப் பின்னரும், இது தற்செயலான ஒரு நிகழ்வே என்று கருதுவோர் ஒரு முக்கிய விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். தற்செயலாக இறைவனுக்குத் தெரியாமல், அவர் நாடாமல் நடந்து விட்ட ஒன்றை இறைவனுக்குத் தெரியாமல் Dr. ரஷாத்கலீஃபா கண்டுபிடித்துக் கூறி மக்களை வழிகெடுத்தார். என்று கூறுவோர் இறைவனின் ஞானத்தைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள். தான் என்ன இறக்கினோம் என்பதை இறைவன் முழுமையாக அறிய வில்லை என்றும், அவர் அறியாத வகையில் தற்செயலாக நடந்து விட்ட ஓர் அற்புதத்தை (இது ஓர் அற்புதம்தான் என்பதை அறிவுடை யோர் இனியும் மறுக்க முடியாது. மறுப்போர் அறிவுடையோராக இருக்க முடியாது) ஷைத்தான் கண்டு பிடித்து Dr. ரஷாத்திடம் கூறி மக்களை வழி கெடுக்க ஏற்பாடு செய்து விட்டான் என்றும் கருதுவோர் கீழ்க்கண்ட வசனத்தைச் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"உமக்கு முன்னரும் நாம் தூதர்களை அனுப்பி இருக்கிறோம். அவர்களில் சிலரைப் பற்றிக் கூறியிருக்கிறோம். சிலரைப் பற்றிக் கூறவில்லை . இறைவனின் அனுமதியின்றி எந்தத் தூதரும் எந்த அற்புதத்தையும் கொண்டு வர முடியாது. இறைவனின் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால் சத்தியம் மிகைத்து, பொய்ப்பித்தவர்கள் வெளிப்படுத்தப்பட்டு, இழிவு படுத்தப்படுவார்கள் (40:78)

எனவே முழுமையாக அறிந்து கொள்வதற்கு முன் இறைவனின் அற்புதத்தைப் பொய்ப் பிக்க முயற்சிக்காமல், இறைவன் கூறுவது போல். கண்கொண்டு பார்த்து, காதைக் கொடுத்துக் கேட்டு, இதயம் கொண்டு சிந்தித்து விளங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். (மறுமையில்) ' 'அவர்கள் யாவரும் வந்ததும், நீங்கள் என் அத்தாட்சிகளை, வசனங்களை முழுமையாக அறிந்து கொள்வதற்குள் பொய்ப்பித்தீர்கள். இதைத் தானே நீங்கள் செய்து கொண்டிருந்தீர்கள்?", (27:84) மேலும் பார்க்க (17:36)

**தொடரும்**

# வாழ்வின் இரகசியங்கள்

தொடர்-2.

அல்குர்ஆன், பலதரப்பட்ட மனிதர்களும் அதைப்பின்பற்றிதம் ஒரே இறைவனை அடைவதற்கு உதவி செய்யும் ஒரு அற்புதமான வழிகாட்டியாகும். மிகவும் கீழான குணமுடையவர்கள் கூட இந்த இறைவேதத்தை மெய்யாக நம்பி, அதில் உள்ள விஷயங்களைச் சிந்தித்து, அதைப் பின்பற்றி வாழ ஆரம்பித்தால் படிப்படியாக மிகவும் உயர்ந்த மனிதராகி விடுவர். அதற்கான வழிமுறைகளும் ஊக்கமும் அதில் விவரிக்கப்பட்டு இருக்கின் றன.

மெய்யான இஸ்லாத்தை அறியாத இன்றைய உலகின் 'முஸ்லிம்கள்' அல்குர்ஆன் என்றால் அது இவர்கள் மிக உயர்வாக மதிக்கும் அவ்லியாக்களுக்கும், அல்லா மாக்களுக்கும் உரிய ஒன்று எனவும், அதில் மிக உயர்ந்த விஷயங்கள், குண நலன்கள் கூறப் பட்டிருக்கும், நம்மைப் போன்ற சராசரி மனிதனால் எல்லாம் அதைப் புரிந்து பின்பற்ற முடியாது எனவுமே எண்ணங் கொண்டுள்ளனர்.

அப்படியல்ல, எந்த மோசமான கெட்ட பழக்கங்களை உடைய மனிதனும், குர்ஆனை அறிந்து, புரிந்து கொள்ள முடியும். உடனடியாக அதைப் பின்பற்ற ஆரம்பித்து விட முடியும். அவரவர் இயல்புக்கு தோதான முறையில் அது பற்பல வழிமுறைகளைக் காட்டுகிறது. மெய்யான நம்பிக்கை கொண்டவர்கள் அவ்வழிகளில் சென்று வாழ்க்கையில் உயரமுடியும். இறை திருப்தியை அடைய முடியும்.

மனிதர்களின் விரோதியான ஷைத்தான் மனிதர்களுக்கிடையில கலகமூட்டி அவர்களை ஒருவருக் கொருவர் விரோதிகளாக ஆக்குவ தில் முனைந்திருக்கிறான். ஆகவே இன்று மனிதர்கள் பெரும்பான்மை யோர் ஒருவருக்கொருவர் விரோதி களாகவே உள்ளனர்.

இறையடியார்களுக்கு பெரிய அளவில் தனிப்பட்ட விரோதிகள் இருக்க நியாயமில்லை . எனினும் இயல்பாக ஏற்படுகிற மனிதத் தவறுகளினாலோ, சரியாக புரிந்து கொள்ளாததாலோ அவர்களுக்கும் சில சிறு விரோதிகள் இருக்கலாம். இதுவரை இருந்திருக்கலாம். ஆனால், இனிமேலும் இருக்கலாமா? நாம் பூமியில் வாழப்போகும் சொற்பகாலத்தில் விரோதிகள்வேறா? இந்தப் பிரச்சனைக்கு குர்ஆன் கூறும் வழியை பார்ப்போமா?

"நல்லதும் தீயதும் சமமாகாது. தீயவற்றை நல்லவற்றைக் கொண்டே தடுத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது உம்பகைவனும் நண்பனாகி விடக்கூடும்." (41:34)

இவ்வசனத்தில் இறைவன் நம்மிடம் விரோதமாயிருப்பவர் களுக்கும் நாம் நல்லதையே செய்யும்படி ஏவுகிறார். இதன் மூலம் அந்த விரோதியும் நமக்கு நெருங்கிய நண்பனாகி விடலாம் என்றும் கூறு கிறார். இந்த சூட்சுமத்தை நாம் வாழ்வின் பல நிலைகளிலும் பிரயோகப்படுத்தவேண்டும்.
இவ்வாறு செய்வதன் மூலம் நாம் பற்பல நெருங்கிய நண்பர்களை அடைய முடியும்.

உதாரணமாக, இப்பொழுது நாம் ஒரு நண்பர் கடைக்கு அடிக்கடி செல்ல வேண்டியிருக்கிறது. நாம் அங்கு செல்லும் பெரும்பாலான நேரங்களில் நம் நண்பர் கடைக்குப் பக்கத்தில் சிறுகடை வைத்து நடத்தும் ஒரு நண்பருடன் கடையில் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கிறார். வழக்கமாக அவர்கள் இருவரும் அவ்வப்போது நம் நண்பர் கடையில் உட்கார்ந்து பொதுவான விஷயங்களை பேசிக் கொண்டிருப்பார் என்று வைத்துக் கொள்வோம். நாம் நம் நண்பரிடம் வேறு விஷயமாக பேச வேண்டியிருக்கிறது. அவர் பேச்சு தடைபடுவதால், நாம் செல்லும் போதெல்லாம் நம்மிடம் மட்டும் வெறுப்பை காட்டி விட்டு எழுந்து சென்று விடுகிறார். தொடர்ந்து அவரைப் பார்க்கும் போதெல்லாம் நம்மிடம் வெறுப்பைக் காட்டுகிறார். என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது நமக்கு என்ன தோன்றும்? "நாம் நம் நண்பரின் கடைக்கு வந்தால் இவனுக்கு என்ன? இவன் மட்டும் தான் கடையில் உட்கார வேண்டுமோ? இவன் கொஞ்சம் வெறுப்பைக் காட்டினால் நாம் - அதைவிட அதிகமாகக் காட்டுவோம்" என்று ஷைத்தான் காதில் வந்து போவான். அதன்படி நாம் நடந்தோமென்றால் நமக்கும் அவருக்கும் சிறிது சிறிதாகப் பகை மூள ஆரம்பிக்கும். அவரைப் பார்த்தால் எரிச்சல் வரும். நாம் அங்கு நிறுத்தியிருக்கும் நம் வாகனத்தை நாம் அறியாத போது ஏதேனும் செய்து விடுவாரோ என்று சந்தேகம் வரும். இவ்விதமாகப் பல தொந்தரவுகள் நாம் ஷைத்தான் கூற்றுப்படி செய்தால் நம்முடன் சம்பந்தப்பட்ட பெரும் பான்மையோர் நமக்கு விரோதிகளாவது தான் மிச்சம். ஆனால் அல்லாஹ் நமக்கு நல்லதைக் கொண்டு தீயதைத் தடுத்துக் கொள்ளும்படி கூறுகிறார். அதைப் பின்பற்றுவதாக வைத்துக் கொள்வோம். இப்பொழுது நம் எதிரி வெறுப்பைக் காட்டினாலும் நாம் அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட வேண்டும். உடனே அவர், நம் மீது காட்டும் வெறுப்பு குறைய

ஆரம்பித்து விடும். அதன்பின் நாம் அவரை பார்க்கும் போதெல்லாம் புன்சிரித்தால் அவரும் வேறு வழியில்லாமல் புன்சிரிப்பார். பின் நாம், "என்னங்க சௌக்கியமா?" என்றால் "ஏதோ கடவுள் புண்ணி யத்துல" என்பார். பின் அவருக்கு ஒரு சிறு உதவி (பணம் என்றில்லை . வேறு எதுவாகவும் இருக்கலாம்) தேவைப்படும் நேரத்தில் நம்மால் அதைச் சுலபமாக செய்ய இயலும் போது அதை செய்து கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம் அவ்வளவுதான் நம் எதிரி உருகிப் போய் நம் நண்பராக ஆவதற்கு முயற்சி செய்வார், இல்லையா?

மேலும் மனிதர்கள் ஒருவரை யொருவர் சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர். ஆங்காங்கே சின்னச்சின்ன உதவிகள் தேவைப்படுபவர்களாகவே நாம் அனைவரும் இருக்கிறோம். அத்தகைய நேரங்களில், உதாரணமாக கையில் நிறைய பொருட்கள் வைத்திருக்கும் ஒரு மனிதர் தன் பொருள்களைத் தவறவிட்டு விட்டு குனிந்து எடுக்க சிரமப்பட்டுக்கொண்டு இருக்கும் போது நாம் அவருக்கு பையைப் பிடித்து உதவி செய்தாலோ, வயதான ஒருவர் பஸ்ஸில் ஏற உதவி செய்தாலோ, குருடர் ஒருவரைப் பாதையைக் கடக்க உதவி செய்தாலோ, தேடிக்கொண்டிருக்கும் சரியான தகவல் ஒன்றை எடுத்துக் கொடுத்தாலோ சம்பந்தப்பட்டவர் மிகவும் மகிழ்ச்சி அடைவார். நாம் செய்வதோ சிறு உதவி! ஆனால் நம் சக மனிதர் அடைவதோ பெருமகிழ்ச்சி! ஆகவே பலர் நம்முடன் நட்புறவு கொள்ளவே விரும்புவர். இறைவன் கூறு கிறார்: "நன்மையில் நீங்கள் ஒருவருக் கொருவர் உதவிக்கொள்ளுங்கள்" இவ்விதமாக நாம் அனைவரும் குர்ஆன் கூறும் வழிமுறைகளை பல நிலைகளிலும் பிரயோகிக்க முயல வேண்டும். மேற்கூறப்பட்டது போல் பற்பல சூழ்நிலைகள் நமக்கு ஏற்படலாம். அந்தந்த சந்தர்ப்பங் களில் நாம் இதைப் பிரயோகிக்க ஆரம்பித்தோமானால் நமக்கு விரோதிகள் இல்லாமல் போவது டன் நம் நண்பர்களின் எண்ணிக்கை யும் அதிகரித்து விடும். இறைவன் நாடினால்,

**(தொடரும்)**

## அறிவிப்பு

கேள்விகளும், விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.
அனுப்புநர் முகவரி இல்லாத கடிதங்கள் பரிசீலிக்கப்படாது.

**- ஆசிரியர்**

# குர்ஆன் மட்டும் போதாதா ?
## அல்முபீன் கேள்வியும்
## நமது-விளக்கமும்

அல்முபீன் இதழின் செய்தி ஆசிரியர் தன் வாதத்தின் துவக்கத்தில் குர்ஆன் மட்டும் போதும் என்று கூறும் சில வசனங்களை மட்டும் குறிப்பிட்டு விட்டு அந்த வசனங்களின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் குர்ஆன் மட்டும்தான் என்று கூறு கிறோம் என்பது போல் எழுதியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட வசனங்கள் பன்னிரண்டு மட்டுமே. ஆனால் எங்கள் ஆதாரம் அந்த 12 வசனங்கள் மட்டுமல்ல. முழுக் குர்ஆனிலும், குர்ஆன் மட்டும்தான் மார்க்க ஆதாரம் என்பதற்கு ஏராளமான வசனங்கள் உள்ளன. முழுக்குர்ஆனின் அடிப்படையில் தான் நாங்கள் எங்கள் வாதங்களை எடுத்து வைக்கிறோமே அன்றி அவர் குறிப்பிட்ட சில வசனங்களின் அடிப்படையில் மட்டுமல்ல. இன்னும் எங்கள் ஆதாரங்கள் விரிவானவையும் கண்கூடா னவையும், மறுக்க முடியாதவையுமாகும். அவற்றை சில அல்முபீன் பக்கங்களில் கூறிவிட முடியாது. எங்கள் வாதங்களையும் ஆதாரங்களையும் எங்கள் இதழில் தொடர்ந்து காணலாம். இன்ஷா அல்லாஷ்.

அவர்தன் வாதங்களை எடுத்து வைத்த அந்த அல்முபீனைப் படிப்பவர்கள் ஒரே விஷயத்தைப்பல வார்த்தைகளில், பலமுறை கேட்டிருப் பதை (2 ம் பக்கம் 10,20) அறிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் ஹஜ்ஜைப் பற்றி குர் ஆனில் எந்த விபரமும் இல்லை என்று கருத்துத் தொணிக்கும் கேள்விகளைக் கேட்டிருக்கிறார். ஹஜ்ஜைப் பற்றி யும், ஹஜ்ஜின் கிரியைகள் பற்றியும் இறைவன் தன் விவரிக்கப்பட்ட வேதத்தில் போதுமான அளவு கூறியே இருக்கிறார். ஹஜ்ஜின் கிரியைகள் பற்றிக் குர் ஆன் கூறுவதை இங்கே காண்போம்.

### ஹஜ்ஜின் ஆரம்பம் :

**"பிறைகளைப் பற்றி அவர்கள் கேட்கிறார்கள்: கூறும் அவை மக்களுக்கு காலத்தைக் கணக்கிட வும், ஹஜ்ஜை அறிவிப்பவையாக வும் உள்ள ன."** (2:189)

இஸ்லாமிய ஆண்டின் 12-வது மாதம் - துல்ஹஜ் (ஹஜ்ஜுடைய மாதம்) என்றே அழைக்கப்படுகிறது. அதுவே ஹஜ்ஜின் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து வரும் 3 மாதங்களான முஹர்ரம், ஸஃபர், ரபியுல் அவ்வல் ஆகிய 4 மாதங்களே ஹஜ்ஜிக்குரிய மாதங்களாகும். துல்ஹஜ் மாதத்தின் முதல் பிறை ஹஜ்ஜின் காலம் ஆரம்பித்துவிட்டதைக்காட்டுகிறது

ஹஜ்ஜின் காலம்

"ஹஜ்ஜின் காலம் குறிப் பிடப்பட்டமாதங்களாகும்" என்று வசனம் 2:197 கூறுகிறது. சில இஸ்லாமிய அறிஞர்கள் என்று பெயர் பெற்றவர்கள் ஹஜ்ஜின் காலத்தை 4 மாதங்கள் என்பதை மாற்றி துல்ஹஜ் முதல் 10 நாட்கள் மட்டும்தான் என்று ஆக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களின் இந்தச்செயல் ஹதீஸ்களின் அடிப்படையிலானதாகும்.

அதற்கேற்ப **'நீங்கள் குறிப்பிட்ட நாட்கள் இறைவனைத் தியானிக்க வேண்டும்"** என்ற 22:28 வசனத்தையும் **'கணக்கிடப்பட்ட நாட்களில் நீங்கள் இறைவனை தியானிக்க வேண்டும்"** என்ற வசனத்தையும் சிதைக்கிறார்கள். இதில் குறிப்பிடப்பட்ட நாட்கள் என்பது நபி ஹஜ் செய்த நாட்கள் என்று ஹதீது புத்தகங்கள் குறிப்பிடும். அந்த துல்ஹஜ்ஜின் முதல் 10 நாட்கள் தான் என்று கூறி முல்லாக்கள் அவ்வசனங்களின் கருத்துக்களை சிதைக்கிறார்கள். சுயலாபம், மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காக 4 மாதங்கள் செய்யக்கூடிய ஹஜ்ஜை அரபிகள் 10 நாட்களுக்குள் செய்ய வேண்டும் என்று ஹதீஸ்களின் உதவியோடு இறைவனின் சட்டத்தை சிதைத்தார்கள். அதன் விளைவை ஒவ்வொரு வருடமும் இந்த முஸ்லிம் சமுதாயம் அனுபவிக்கவே செய் கிறது. இறைவனின் ஏற்பாடான '4 மாதங்களில் ஹஜ்' என்பதில் சுமைகள் இல்லை, நிர்பந்தம் இல்லை, நெரிசல் இல்லை, விபத்துகளும் இல்லை. மகிழ்ச்சியும் முழு திருப்தியும் கிடைக்கிறது. ஆனால் 10 பத்து நாட்களில் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் ஒரே நாளில் ஹஜ் செய்ய வேண்டும் என்று ஆக்கி வைத்திருப்பதால் இந்த வருடம் ஹஜ்ஜில் ஏதேனும் பெரும் விபத்து நடக்குமா நடக்காதா என்று விபத்தை எதிர் நோக்க வேண்டிய நிலையில் இன்றைய முஸ்லிம் சமுதாயம் உள்ள து.

உண்மையில், 'குறிப்பிடப் பட்ட நாட்கள்' என்பது ஹஜ் கடமையானவர்கள் அனைவரும் ஒரே நாளில் மக்காவை அடைந்து தங்கள் ஹஜ் கிரியைகளை ஆரம்பித்து (காஃபாவை வலம் வருவது ஸஃபா மர்வா, மினா, அரஃபா முஸ்தலிஃபா, கல்லெறிதல், தலை முடி வெட்டுதல், குர்பானி கொடுத்தல்) மீண்டும் கஃபாவை வலம் வந்து ஹஜ்ஜை அதன் கிரியைகளைப் பூர்த்தி செய்தல் என்பது அல்ல.

மேற்குறிப்பிட்டகிரியைகளைப் பற்றிக் குர்ஆன் கூறும் வசனங்களைக் கீழே தந்திருக் கிறோம். எனவே மேற்குறிப்பிட்ட கிரியைகள் அனைத்தும் ஹஜ் செய்யும் ஒவ்வொருவருக்கும் கடமைதான், ஆனால் இந்தக் கிரியைகளை ஹதீதுகளின் அடிப்ப டையில் துல்ஹஜ்ஜின் முதல் 10 நாட்களில்தான் செய்ய வேண்டும் என்று தங்கள் சுயலாபங்களுக்காக ஆக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் இறைவன் குறிப்பிட்ட 'புனித மாதங்கள் நான்கில் எப்பொழுது வேண்டுமானாலும் ஹஜ் கிரியைகள்

சில நாட்கள் செய்யப்பட வேண்டியது என்பதையும் அவற்றை ஹஜ்ஜின் காலமான 4 மாதங்களில் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம் என்பதையும் மறைக் கிறார்கள். இதைப் போன்ற மற்ற வசனங்களான 2:184 ' 'நோன்பு குறிப்பிடப்பட்ட நாட்களாகும்" என்று கூறுகிறது. நோன்பின் காலம் ரமளான் முழுவதும் என்று மற்றொரு வசனம் கூறுகிறது. இருப்பினும் 2:184-ல் நோன்பு குறிப்பிடப்பட்ட நாட்களாகும் என்று கூறுவதைப் போலவே குறிப்பிட்ட நாட்களில் இறைவனை தியானியுங்கள்" என்று ஹஜ் சம்பந்தப்பட்ட இவ்வசனங்கள் கூறுகிறது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

**ஹஜ்ஜின் போது செய்யக் கூடாதவை**

1. வேட்டையாடுதல்.

ஹஜ்ஜின் போது நீங்கள் வேட்டையாடக்கூடாது. இறைவன் தான் நாடியதை விதிக்கிறார். 5:1 இவ்வசனம் ஹஜ்ஜின் போது வேட்டையாடுவதைத் தடை செய்கிறது. மேலும் பார்க்க (5:2, 5:95)

2. போரும் சண்டையும்.

புனித மாதங்களான ஹஜ்ஜின் காலத்தில் தற்காப்புக்காக அன்றி போரும் சண்டையும் தடுக்கப்படுகின்றன. ' 'புனித மாதங் களைப் பற்றியும், அவற்றில் சண்டையிடுவதைப் பற்றியும் கேட்கிறார்கள் கூறும் அவற்றில் சண்டை யிடுவது பெரும் வரம்பு மீறலாகும், குற்றமாகும். 2:217

3. உடலுறவு, துர்நடத்தை , தர்க்கம் - தடுக்கப்படுகிறது.

ஹஜ்ஜின் காலம் முழுவதும் ஹஜ் ' செய்பவர்கள உடலுறவு, துர்நடத்தை, தர்க்கம் ஆகியவற்றில் ஈடுபடக் கூடாது. 2:197

4. முடிவெட்டுதல் தடுக்கப்படுகிறது. 2:196 வசனத்தின் படியே பிராணி பலி கொடுத்து முடிக்கும் வரை முடி வெட்டிக்கொள்வது தடுக்கப்படுகிறது.

5. தவாஃப். கஃபாவை வலம் வருதல் தவாஃப் வலம் வருதல் பற்றி 22:29, 2:125 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்படுகிறது.

6. ஸஃபா - மர்வா .

2:158ம் வசனம் ஸஃபா மர்வா ஆகிய இடங்களைக் சுற்றிவருவது பற்றிக் குறிப்பிடுகிறது.

7. அரஃபாமலை - முஸ்தலிபா.

இவ்விரு சடங்குகளும் 2:198ல் கூறப்படுகிறது. பின்னர் நீங்கள் அரஃபாவிலிருந்து திரும்பும் போது மஷ்அருல் ஹராம் எனும் புனித ஸ்தலமான முஸ்தலிபாவில், இறைவனைத் தியானம் செய்யுங்கள் (2;198)

8. மினா .

மினாவுக்கு செல்வது பற்றி வசனம் 2:203 கூறுகிறது.

இரண்டு நாட்களோ அதற்கு அதிகமாகவோ நீங்கள் மினாவில் இறைவனைத் தியானியுங்கள்,

9. பலிப்பிராணிகள்.

பிராணிப் பலி கொடுப்பது ஹஜ்ஜின் ஒரு சடங்களாகும். இது 22:36ல் கூறப்படுகிறது. "பிராணிப் பலி கொடுப்பது உங்கள் நன்மைக் காக இறைவன் விதித்த சடங்காகும். அவை வரிசையில் நிற்கும் போது இறைவனின் பெயரைக் கூறுங்கள். பிறகு அவை (இறந்து) கிழே விழுந்த பின்னர் அவற்றிலி ருந்து நீங்களும் உண்ணுங்கள். ஏழைகளுக்கும், தேவையுள்ளோருக்கும் உண்ணக் கொடுங்கள். இதற்காகவே நாம் அவற்றை உங்களுக்கு வசப் படுத்திக்கொடுத்துள்ளோம். நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு" (22:36).

இன்னும் இறைவன் ஹஜ்ஜைப் பற்றிப் பல வசனங்களில் பற்பல தகவல்களைக் கூறுகிறார். இவர்கள் எண்ணுவது போல் ஹஜ்ஜின் கிரியைகளை இறைவன் விவரித்துக் கூறாமல் இல்லை. ஹஜ்ஜைப் பற்றிய மேல் விவரங்களை அறிந்து கொள்ள ஹஜ் பற்றிக்குறிப்பிடும் வசனங்கள் அனைத்தையும் நாம் படித்து சிந்தித்தால் அனைத்து விவரங்களும் தேவை யான அளவுக்கு தெளிவாகவே கூறப்பட்டுள்ளது. என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். ஹஜ் பற்றிக் குறிப்பிடும், தகவல்கள் தரும் வசனங்க ள் 2:158, 189, 196-200, 203, 3:97, 5:1, 94-96, 9:3, 19, 22:26-29, 28:27, 48:25-27 இவ்வசனங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளைப் படித்து சிந்தித்து விட்டு, வாசகர்கள் ஹஜ் பற்றிய தங்கள் கேள்விகளை எங்களுக்கு அனுப்பினால் அவற்றைக் குர்ஆன் ஒளிகொண்டு தெளிவுபடுத்தப்படும். ஹதீதுகளின் அடிப்படையில் ஹனஃபி ஒரு விதமான ஹஜ், ஷாஃபி ஒரு விதமான ஹஜ், அஹ்ல ஹதீஸ் ஒரு விதமான ஹஜ் ஸலஃபிக்கு ஒரு விதமான ஹஜ், ஷியாவுக்கு ஒருவிதமான ஹஜ், காதியானிகள் ஒரு விதமான ஹஜ் என்று இவர்கள் ஆக்கி வைத்திருப்பதும், அவற்றில் உள்ள வித்தியாசங்களும் குர் ஆனில் கூறப்படாத விஷயங்களால்தான் உண்டாகிறது. சில்லறை விஷயங் களிலும், என்ன ஓத வேண்டும் என்பதிலும் ஹதீதுகளில் ஏராளமான முரண்பாடுகள் காணப்படுவதனால் தான் இந்நிலை ஏற்படுகிறது. மார்க்கம் நிலை நாட்டப்பட்டு உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொண்டு பிரித்தறிவிக்கும் குர்ஆனின் உதவி கொண்டு நாம் சிந்தித்தால் அனைத்து விஷயங்களும் தெளிவாகவே இருக்கும். இன்ஷா அல்லாஹ் ஹஜ் பற்றியும் அதன் கிரியைகள் பற்றியும், இவர்கள் ஹஜ்ஜின் போது செய்யும் இணைவைக்கும் செயல்களையும் விரிவாக, வரும் இதழ்களில் வெளியிட நாடியுள் ளோம்.

(பதில்கள் தொடரும்)

# இறைவனை முழுமையாக நம்பாதிருப்பதன் பின் விளைவு

இறைவன் தன் இறுதி வேதமான அல்குர் ஆனில் அது முழுமையானது, தெளிவானது மிகச் சரியானது, விவரிக்கப் பட்டது என்கிறார். பார்க்க (6:38,39, 114, 115)

மார்க்க ஆதாரமாக, குர்ஆனைத் தவிர வேறு எதனையும் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது, பின்பற்றக் கூடாது என்ற அவருடைய கட்டளை மிகத் தெளிவாகவும், கண்டிப்புடனும் கூறப்படுகிறது. பார்க்க (6:19, 17:39)

இப்போது, நாம் இறைவனை முழுமையாக நம்பவோ அல்லது அவருடைய உபதேசங்களை மறுத்து அவருடைய கட்டளைகளை அலட் சியம் படுத்தவோ, தீர்மானிப் பதற்கான முழு சுதந்திரம் நமக் குள்ளது. ஆனால் நாம் அதன் பின் விளைவுகளை சந்திக்க (அல்லது சிந்திக்க) தயாராக வேண்டும்.

இறைவனை முழுமையாக நம்பமறுப்பது மிகக்கடுமையான குற்றம் என்பதை சந்தேகத்திற் கிடமின்றி நாம் ஒப்புக்கொள்வோம். எவ்வளவு தூரம் கடுமையான குற்றம் என்பதை குர்ஆன் வசனம் 7:40- ல் காண்போம்.

'நிச்சயமாக, யார் நம், வசனங்களை (முழுமையாக) நம்பாமல், அவற்றைப் பணியாமல் பெருமை யடித்தார்களோ அவர்களுக்கு வானத்தின் வாயில்கள் ஒருபோதும் திறக்கப்படாது. அன்றியும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரை அவர்கள் சுவர்க்கம் நுழைய மாட்டார்கள். இவ்விதமாக குற்றவாளிகளை நாம் தண்டிக்கிறோம்.

ஆகவே, இறைவனை முழு மையாக நம்ப மறுப்பவர்கள் சுவனம் நுழைவது சாத்தியமற்ற ஒன்றாக அவர் ஆக்கியிருக்கிறார்.

# இறைவனுக்கு கட்டுப்படுங்கள்! தூதருக்கு கட்டுப்படுங்கள்!

இறைவனுக்குக் கட்டுப்படுங்கள். தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்ற வசனத்தை இறைவன் ஒன்று சொன்னது போலவும் தூதர் மற்றொன்று சொன்னது போலவும் காட்டி இரண்டையும் சேர்த்தே பின்பற்ற வேண்டும் என்று கூறி இன்றைய இஸ்லாமிய அறிஞர்கள் என்றழைக்கப் படுவோர் சராசரி முஸ்லிம்களை ஏமாற்றி வருகின்றனர். இறைவன் நம்மைத் தன் தூதருக்கு, அதாவது தன் தூதுக்கு கட்டுப்படும்படி கூறு கிறாரே தவிர முஹம்மத் என்ற மனிதருக்கல்ல. தூதருக்குக் கட்டுப்படுவது என்பது தூதர் கொண்டு வரும் இறைத்தூதுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதையன்றி வேறில்லை. தூதர் இறைவனிடமிருந்து பெற்ற செய்திகளை ஆதாரங்களுடன் நமக்குக் கூறும் போது, நாம் தூதருக்குக்கட்டுப்படுவதன் மூலம் இறைவனுக்கே கட்டுப்படுகிறோம்.

இல்லை , தூதர் நமக்குக் குர்ஆன் வசனங்களை விளக்கிக் கூறுகிறார் என்று கருதுபவர்கள் இறைவனின் வார்த்தைகள் விளக்கமில்லாதவை,தெளிவில்லாதவை, விவரிக்கப்படாதவை என்று இறைவன் மீது பழி கூறுகின்றனர். மனிதர்களுக்கு அவசியமான ஒன்றை இறைவன் செய்யவில்லை அல்லது செய்ய முடியாது, முஹம்மத் நபிதான் அதைச்செய்தார் என்றும் கருத்து வெளியிடுகின்றனர். இது முஹம்மத் நபியின் விருப்பத்துக்கு மாறாக, அவரை இறைவனுடன் இணை வைப்பதாகும்.

அவர்களில் பலரும் குர்ஆன் தெளிவானது, முழுமையானது, விவரிக் கப்பட்டது என்பதையும் ஒப்புக் கொள்வதாகக் கூறுவர். ஆயினும் தொடர்ந்து நாம் அவர்களிடம் பேசினால் குர் ஆன் முழுமையானதல்ல, தெளிவானதல்ல, விவரிக்கப்பட்டது அல்ல என்ற கருத்தை வேறு வார்த்தைகளில் கூறுவர். 'ஆனால்' என்ற வார்த்தையுடன் ஆரம்பிக்கும் அவர்களின் ஆட்சேபங்கள் குர் ஆனைப் பற்றிய அவர்களின் அறியாமையையும், நம்பிக்கையின் மையையுமே காட்டும்.

தூதருக்குக்கட்டுப்படுவது என்பது குர்ஆனுக்குக் கட்டுப்படுவதே என்பதற்குக் குர்ஆன் நமக்கு பல உதாரணங்கள் கூறுகிறது. முஹம்மத் நபி இறைத்தூதர் என்ற முறையில் கூறிய குர்ஆனுக்குக் கட்டுப்பட வேண்டுமே அன்றி அவரது அபிப்பிராயங்களையோ, பழக்க வழக்கங்களையோ, தவறுகளையோ பின்பற்றக் கூடாது என்பதை ஒரு முழு சூராவும் நமக்குக் கூறுகிறது. அது ஹதீஸ், மற்றும் சுன்னத் என்றழைக்கப்படுபவற்றை மார்க்க ஆதாரங்களாக சட்ட நூல்களாக எடுத்துக் கொள்வதை விட்டு நம்மைத் தடுக்கிறது.

அந்த அத்தியாயம் 'அபஸ' = அவர் கடுகடுத்தார். என்ற பெயர் கொண்டது. முஹம்மத் நபி ஒரு ஏழைக் குருடரைப் புறக்கணித்து, ஒரு பணக்காரனின் பால் தன் முழு கவனத்தையும் செலுத்திய சம்பவத்தை அது விவரித்துக் கூறுகிறது. முஹம்மத் என்ற 'மனிதர்' தவறு செய்வதும் அதை இறைவன் கண்டிப்பதும் அதில் நமக்குக் காட்டப்படுகிறது.

இவை முஹம்மத் நபி இறைத்தூதர் என்ற நிலையில் இறைவனிடமிருந்து பெற்ற செய்தியாக எதைக் கூறுகிறாரோ அதை மட்டும் பின்பற்ற வேண்டும் என்றும் முஹம்மத் என்ற மனிதரின் தவறுகளை நாம் பின்பற்றக் கூடாது என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

இன்னும் வரும்

# சிலை வணக்கம் மட்டும்தான் இணை வைத்தலா ?

## இணை வைத்தலின் பரிமானங்கள்

சிலை வணக்கம் புரியாத முஸ்லிம்கள் என்றழைக்கப்படுவோரும், கிருஸ்தவர்களும் அவர்களல்லாத மற்றவர்களைப் பற்றி எண்ணிக் கொள்வது என்னவென்றால் அவர்கள் பல்வேறு விக்ரஹங்களை வழிபடுவதன் மூலம் இறைவனைப் பழித்து (Blasphemy) இணைவைத்தல் செய்கின்றார்கள் என்பதுதான்.

இத்தகையவர்களின் நினைப்பு என்ன வென்றால் விக்ர ஹங்களை, கல்லை அல்லது அது போன்ற பொருட்களை வணங்கு வது மட்டும் தான் இறைவனுக்கு இணை வைக்கும் செயல்; அதுதான் மிகப்பெரும் பாவம்; என்றும், அது அல்லாத மற்றெதுவும் இணை வைத்தல் அல்ல என்பதுமாகும்.

ஆனால் இறைவன் முந்தையவற்றை மெய்ப்பிக்கும் தனது கடைசிவேதமான குர்ஆனில் கூறுவதென்னவென்று பார்ப்போம்.

### 1. தனது குழந்தைகளை இறைவனுக்கு இணையாக்குதல்:-

நாம் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய நம்முடைய குழந்தைகளை நாம் எவ்வாறு வணங்கக் கூடிய ஒன்றாக ஆக்குகிறோம்? இது எங்ஙனம் சாத்தியம்? நாம் இறைவனைத் வணங்குகிறோம். குழந்தைகளையா வணங்குகிறோம் என்று நாம் எதிர்மறையாக எண்ணலாம். அப்படியல்ல நாம் நம்முடைய குழந்தைகளை இறைவனுக்கு இணையாக்குதல் என்பது. எவ்வாறெனில், நாம் நம்முடைய குழந்தை களை நன்றாக படிக்க வைத்தோ அல்லது நல்லதொரு தொழிலைக்கற்றுக் கொடுத்தோ ஆளாக்கி விட்டோமானால் நம்மைப் பின்நாளில் காப்பாற்றுவார்கள் என்றெண்ணுவதாகும். இதனையே இறைவன் தனது திருமறையில் 7:189 மற்றும் 190-ல் கூறுகிறார்.

"அவர் உங்களை ஒரு மனிதரிலிருந்து (ஆதம்) படைத்தார். அதன்பின், அவர் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு துணையினை, அவளிடம் அமைதி காணுவதற்கென தருகிறார். பிறகு அவள் அவளாலேயே உணர முடியா, ஒரு மெல்லிய சுமையைச் சுமக்கிறாள். அந்தச்சுமையானது கணக்கும் தருணம். அவர்கள் தங்கள் ரட்சகரான இறைவனை அழைத்து, 'நீர் எங்களுக்கு நல்லதொரு குழந்தையைத்தந்தால், நாங்கள் நன்றி செலுத்துவோம்" என்கிறார்கள்.

"ஆனால் , அவர் அவர்களுக்கு நல்லதொரு குழந்தையைத்தரும் போது, அவர்கள் அவரின் அப்பரிசையே அவருக்கெதிரான இணையாகத் திருப்புகின்றனர்.

இறைவன் எவ்வித கூட்டாளிகளை விட்டும் மிகவும் உயர்வானவர். " (7:189-190)

இவ்வாறு செய்வதன் மூலம் அவர்களை இறைவனுக்கு இணையாக்குவதும் அல்லாமல் பெற்றோர் என்ற ஸ்தானத்தில் இருந்து, அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளான இறைவனைப் பற்றிய அடிப்படை ஞானம், இறை வணக்கம், இறைவேதத்தைப் (குர் ஆனைப்) புரிந்து படிப்பது செயல்படுத்துவது போன்றவற்றை நாமும் கடைப்பிடிக்காமல் இருந்து கொண்டு அவர்களுக்கும் ஏவுவதில் தவறி வருகிறோம். எனவே நாம் நம்முடைய குழந்தைகளை இவ்வாறு இறைவனுக்கு இணையாக்குவதி லிருந்து தவிர்த்துக் கொள்வோ மாக.

## 2. சொத்துக்களை இணையாக்குதல் :-

நம்முடைய தந்தையின் சொத்து, பாட்டன் முப்பாட்டனின் சொத்து மற்றும் நம்முடைய வேலை, தொழில் போன்றவை நமக்கு என்றைக்கும் துணையிருக்கும், ஆகவே கவலை கொள்ளத்தேவை யில்லை என்று எண்ணுவதும் இணை வைத்தலின் ஒரு பரிமாணமே. எப்படி என குர் ஆனில் பார்ப்போம்:-

18:32 " இரு மனிதர்களின் உதாரணத்தை அவர்களுக்குக் காட்டு வீராக: நாம் அவர்களில் ஒருவருக்கு பேரீத்த மரங்கள் சூழ்ந்த இரு திராட்சைத் தோட்டங்களைக கொடுத்தோம். மேலும் அதனிடையே வெவ்வேறு பயிர் வகைகளையும் அமைத்தோம்"

33. இரு தோட்டங்களும் தங்கள் பயிர்களை சரியான காலத்தில் விளைவித்தன. ஏனெனில் அவற்றினூடே ஓர் ஆற்றையும் நாம் ஓடச் செய்தோம்.

34. "ஒரு முறை அவர் அறுவடையின் பிறகு, தன் தோழரிடம் பெருமையடித்தவராக, "நான் உன்னை விட மிகவும் அபிவிருத்தி அடைந்தவன். மேலும் மக்களிடம் மிக்க செல்வாக்கும் பெற்றிருக்கிறேன்" என்றார்.

35: "அவருடைய தோட்டத் தில் நுழையும்போது "இது என்றைக் காவது முடிந்து விடும் என்று நான் எண்ணவில்லை" என்று சொல்லி தன்னுடைய ஆன்மாவுக்கு அநீதியி ழைத்தவரானார்"

36: "மேலும் இதுவேதான் சரி என எண்ணுகிறேன்; (மறுமை) வேளை என்றைக்காவது வரக்கூடும் என்று நான் எண்ணவில்லை. நான் என் இரட்சகனிடம் திரும்பிச் சென்றாலும் அங்கும் எனக்கு இதைவிட சிறந்த ஒன்றே கிடைக்கும்" என்றார்.

37. அவருடைய தோழர் அவரிடம் சொன்னார்: அவர் விவாதித்தவராக, அவரிடம் "உன்னை " மண்ணிலிருந்தும், பிறகு ஒரு சிறு துளியிலிருந்தும் படைத்து

பிறகு உன்னை ஒரு மனிதனாக செவ்வையாக்கிய ஒருவரை நீ நிராகரிக்கிறாயா?" என்றார்.

38. "என்னைப்பொறுத்த மட்டில், இறைவன்தான் எனது இரட்சகன். இன்னும் நான் என் இறைவனுடன் மற்றெந்த தெய்வத் தையும் எப்பொழுதும் ஏற்படுத்திக் கொள்ள மாட்டேன்" என்றார்.

39. நீ உன்னுடைய தோட்டத் தினுள் நுழையும் போது இதுவே இறைவன் எனக்களித்தது (மாஷா அல்லாஹ்) இறை வனையன்றி மற்றெவரும் சக்தி பெற்ற வரல்லர் (லாகுவ்வத்த இல்லா பில்லாஹ்) எனச் சொல்லியிருக்க வேண்டும். நான் உன்னை விட செல்வத்திலும் குழந்தைகளிலும் குறைந்திருப்பதை நீ பார்த்தாலும்,

40. என் இரட்சகன் உன் தோட்டத்தைவிட சிறந்ததை எனக்க ளிக்கக் கூடும். அவர் உன்னுடைய தோட்டத்தை முற்றிலும் பலனற்ற தாக்கி விடக்கூடிய அழித்தொழிக்கும் கடுங்காற்றை வானிலிருந்து அனுப் பக் கூடும்.

41. அல்லது அதன் தண்ணீர் (திடல்) உனக்கு எட்டாத ஆழத்திற்கு சென்று விடக்கூடும் (என்றார்).

42. மெய்யாகவே, அவரு டைய பயிர்கள் அழிந்து போயின. அவருடைய சொத்து பலனற்றுப் போனதால் அதன் மீது அவர் செலவு செய்தது வீணானதே என்று புலம்பி வருந்த வேண்டியவரானார். இறுதியில் அவர் "நான் எனது சொத்துக்களை என்னுடைய இறைவனுடன் ஒரு தெய்வமாக நான் எப்பொழுது மே ஆக்கி யிராமலிருக்கவே விரும்புகிறேன்" என்று கூறினார்.

எனவே, இனியாவது 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பவர்கள், ஆயுத பூஜை (முஸ்லிம்கள் என்றழைக்கப்படுவோர் உட்பட) செய்பவர்கள் இணைவை ப்பிலிருந்து தவிர்த்துக்கொள்க.

## (3) அகந்தை கொள்வதும் இணைவைப்பே!

"நான் நினைத்ததை முடிப்பவன்" "என்னால்தான் இது நடந்தது" "நான் சொல்வதை நீ கேள்" நான் செய்ததே சரி, எனக்கு எல்லாம் தெரியும். இவன் என்ன எனக்கு சொல்வது" நான் பெரிய ஆள்" மேற் சொல்லப்பட்டது போன்ற அறிக்கைகள் எல்லாம் நம்முடைய அகந்தையின் வெளிப்பாடே!

நம்மை மீறிய ஒரு சக்தியான இறைவன் அனைத்து விஷயங்களையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை மறந்துவிட்டு நாம் இவ்வாறெல்லாம் பேசிக் கொண்டும் எண்ணிக்கொண்டும் இருக்கிறோம். எந்த நேரத்திலும் நாம் நினைத்தது நிறைவேறாமல் போகலாம், நமக்கு தெரிந்த விஷயங்கள் தவறாக ஆகிவிடலாம். அனைத்து வல்லமையும் அனைத்தும் அறிந்தவரான இறைவனிடத்தில் மட்டுமே உண்டு என்றெண்ணுவதுதான் நம்முடைய

அகந்தையை, மனோ இச்சையை இணை வைப்பிலிருந்து விலக்கிக் கொள்வதாகும். மேலும் நம் கட்டுரையின் இரண்டாவது உப தலைப்பில் காணப்படும் இரு தோழர்கள் பற்றிய (18:34) வசனத்திலும் இவ்வகந்தையின் நிலை நமக்குப்புரிகிறது. இதோ, அகந்தையின் ஆரம்ப வடிவமான, நமது பகிரங்க விரோதியுமான ஷைத்தானின் அறிக்கையினை குர்ஆன் 7:12 சொல்கிறது:

"அவர் (ஷைத்தானிடம்) கேட்டார். நான் கட்டளையிட்ட போது சிரம் பணிவதிலிருந்து, உன்னைத் தடுத்தது எது?' 'அவன் (இறைவனிடம்) சொன்னான்: 'நான் அவரை (ஆதம்) விட உயர்ந்தவன், நீர் என்னை நெருப்பிலிருந்து படைத்துள்ளீர், மேலும் அவரை மண்ணிலிருந்து படைத்துள்ளீர்."

இவ்வாறு சொன்னதன் மூலம் ஷைத்தான் தன்னுடைய அகந்தையை இறைவனுக்கு இணையாக்கி விட்டான் என்றறிகிறோம். மேலும், அவனே கீழ்க்காணும் (25:43) இறைவசனத்தின் கதாபாத்திரமாக உள்ளான்.

"தன்னுடைய - அகந்தையினை தெய்வமாக்கிய ஒருவனை நீர் பார்த்தீரா? நீர் அவனுடைய பொறுப்பாளராக ஆகுவீரா?"

ஆகவே நாம் அவனுடைய பொறுப்பாளராக ஆகியோ, அல்லது அவனை நமது பொறுப்பாளனாக ஆக்கியோ அவனைப் பின்பற்று வதிலிருந்து தவிர்த்துக் கொண்டு அதள பாதாளத்தில் விழுந்து விடாதிருப்போமாக!

(4) தத்தம் தலைவர்களையோ மத குருக்களையோ இணையாக்குதல் : இவ்வுலகில் இவ்வாறு செய்யாத மனிதர்கள் மிகவும் சொற்பமே. இறை நம்பிக்கையற்ற கம்யூனிசவாதிகள் முதல் இறை நம்பிக்கை உள்ளவர்களான கிருஸ்தவ, ஹிந்து மற்றும் முஸ்லிம்கள் என்றழைக்கப்படுவோர் வரை தங்களுடைய தலைவர்களை அடியொற்றி நடப்பவர்களாக உள்ளனர். அவர்களுடைய சொற்களையும், செயல்களையும், கொள்கைகளையும் தங்களுக்கு முன்னுதாரணமாக்கிக் கொண்டு தவறான வழியில் சென்று கொண்டிருக்கின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் தங்களைப் படைத்த இறைவனுக்கு இணை வைக்கிறோம் என்பதைக் கூட அறியாதிருக் கின்றனர் (6:22-24) இதோ இறைவனின் கூற்று : 9:31 -ல்

“அவர்கள் இறைவனுக்குப் பதிலாகத் தங்கள் மதத்தலைவர்களையும், அறிஞர்களையும் ரட்சகர்களாய் ஆக்கிக் கொண்டனர். மற்றும் சிலர் மேரியின் மகன் மஸீஹையும் தெய்வமாக்கினர். அவர்கள் அனைவருமே ஒரே இறைவனை வணங்கும்படிக்கட்டளையிடப்பட்டனர். அவரைத் தவிர வேறு இறை இல்லை. எவ்வித கூட்டாளிகளை ஏற்படுத்திக் கொள்வதை விட்டும் அவர் மிகவும் பரிசுத்தமானவர்"

மேற்கூறப்பட்ட வசனத்தின் கருத்து யாதெனில் உதாரணமாக, நிரூபணம் உள்ள வேதமான குர்ஆனில் இவ்வாறிருக்கிறதே என்று இப்போது நாம், முஸ்லிம்கள் என்றழைக்கப் படுபவர்களின் அறிஞர்களிடம் இது பற்றி கேட்போமானால், மேலும் இறைவனின் சொல்லான குர்ஆனை மட்டுமே உயர்த்திப் பிடிப்பது பற்றியும் கேட்போமானால் அவர்கள் அதற்கெதிரான விஷயங்களையே அறிவுறுத்துவார்கள்.

இன்னும் ஜீஸஸின் நிலை பற்றி போப்பாண்டவரிடம் கேட்போமானால் அவர் நம்மை திரித்துவக் கொள்கையினைப் பற்றிப் படிக்கும் படி அறிவுறுத்துவார். ஆகவே நாம் இப்போது முஸ்லிம் அறிஞர்கள் என்றழைக்கப்படுவோரிடம் இறைக் கட்டளைக் கெதிரான அறிவுரை களைப் பற்றிப் பிடித்து அவர்களுக்கு வழிபட்டாலோ, அல்லது இறைவ னுக்குப் பதிலாக போப்பாண்டவரின் அறிவுரையினை எடுத்துக் கொண்டாலோ, நம்முடைய தலைவர்களான இவர்களை இறைவனுடைய இடத்தில் தெய்வங்களாக ஆக்கிக் கொள்கிறோம்.

எனவே நாம் இனியாவது நம்முடைய தலைவர்களுக்கு கட்டுப்படுகிறோம் என்ற பெயரில் இறைவனின் கட்டளைகளுக்கு மாறு செய்யும் அளவுக்கு அவர்களை அதிகமாக நேசிப்பதன் மூலம் இறைவனுக்கு இணையாக்குவதை விட்டும் விலகுவோமாக!

## (5) வானவர்களை இணையாக்குதல் :-

பண்டைய காலத்தில் கிரேக் கர்களும் ரோமர்களும் தங்களுக்கு மீறிய சக்திகளை (79:1-5) அதாவது வானவர்களை (Angels) பற்பல பெயர்களைச் சூட்டி அழைத்து, அவர்களின் தேவை இறைவனுக்கு உண்டு என்பதாக கற்பித்து இறைவனுக்கு இணையாக்கினர்.

கிருஸ்தவர்கள், திரித்துவக் கொள்கையின் ஒரு அங்கமாக கேப்ரியல் - ஜிப்ரயீல் - ஐ ஆக்கிக் கொண்டு இறைவனுக்கு இணையாக் கினர்.

மக்காவின் அரபுக்குறைஷிகள் தங்களுடைய உலகத் தேவை களுக்காக இறைவனிடம் பரிந்துரை செய்யும் பொருட்டு வானவர்களை பெண் (தெய்வங்)களாக உருவகித்து அவர்களை வழிபட்டு வந்தனர். (53:19-27). இதுவே பல ரூபங்களில் மாறி இந்நாட்டில் தேவதைகளை தெய்வங்களாக்கி வழிபடும் வழக்கமாக மாறியிருக்கக் கூடும்.

## (6) வேதம் பெற்ற தூதர் (நபி)களை இணையாக்குதல்

யூதர்கள் உஜைர் அவர்களை இறைவனின் மகனாக உருவகித்ததன் மூலம் (9:30) இறைவனுக்கு இணையாக்கினர். கிருஸ்தவர்கள் ஈஸா அவர்களை இறைவனின் மகனாக உருவகித்ததன் மூலமும், மூவரில் ஒருவராக ஆக்கியதன் மூலமும் இறைவனுக்கு இணையாக் கினர்.

இந்நாட்டில் புத்தர், கிருஷ்ணர், திருவள்ளுவர், ராமன் போன்றோர் கடவுள்களாக ஆக்கப் பட்டுள்ளனர். அவர்களின் நிலை பற்றியும் தகுதிகள் பற்றியும் இறைவனே மிக்க அறிந்தவர்.

அதே போல, முஸ்லிம்கள் என்றழைக்கப்படுவோரும் இந்த விஷயத்தில் விதிவிலக்கானவர்கள் இல்லை. இவர்களும் முஹம்மது அவர்களை ஸலாவாத்து எனும் பெயரில் தொடர்ந்து துதிப்பதன் மூலமும் அவர் தூதர் என்பதற்கு இறைவனின் சாட்சியமே போதும் (4:79) என்றிருக்க நாங்களும் சாட்சி கூறுவோம் என்று கூறியும் அதுவே எங்களின் அடிப்படைக் கொள்கை என்று கூறியும் ஏகத்துவ சாட்சியத்தில் இறைவனுடன் இணைப்பதன் மூலமும் இறைவனுக்கு இணையாக்கு கின்றனர். ஆனால் அவருடைய அறிக்கை என்ன என்று இறை மறையில் காண்போம். 3:79-ல். “வேதத்தினையும், வேதம் பெறும் பேற்றினையும் கொண்டு அருள் செய்யப்பட்ட ஒரு மனிதர்" இறைவனுடன் என்னையும் துதிப் பவர்களாகி விடுங்கள்" என்று மக்களிடம் ஒரு போதும் கூற மாட்டார். மாறாக, உங்களுக்கு வழங்கப்பட்ட வேதத்தின் அடிப்படை யில் கற்றுக் கொண்டும், கற்றுக்கொடுத்துக்கொண்டும்உங்க ளுடைய ரட்சகனுக்கு மட்டுமே உங்களை முழுவதுமாக அர்ப் பணித்து விடுங்கள்" என்றுதான் கூறுவார். 3:80-ல் "இன்னும் அவர் வானவர்களையோ அல்லதுவேதம் பெற்ற தூதர்களை (நபி)யோ ரட்சகர்களாய் ஆக்கிக் கொள்ளும்படி ஏவமாட்டார். அடிபணிந்தோராய் ஆகிவிட்ட பின்னர் நிராகரிக்கும்படி உங்களை அவர் தூண்டுவாரா?"

மேலும், இறைவனுடன் வேறு எந்த ஒன்றும் நமக்கு உதவக்கூடும் என்று எண்ணுவதும் இணைவைப்பாகும் என்றுணர்ந்து அதிலிருந்து விடுபடுவோமாக.

இறுதியாக, ஒரு நாளின் அதிகமான நேரம் நம்முடைய நினைவலைகளை ஆக்கிரமிக்கக் கூடிய ஒன்றே நம்முடைய இறைவன் என்பதையும் உணர்ந்து நம்முடைய கவனத்தை உலக விஷயங்களான தொழில், வேலை, பிள்ளைகள், துணைகள், கற்பனைக் கோட்டைகள் போன்றவற்றில் அதிக நேரம் செலுத்தாமல் அவற்றையும் இறைவ னின் கட்டளைகளுக் கிணங்க செயல்படுத்துவதன் மூலம் இறை தியானத்தை அதிகப்படுத்து வோமாக.

மேலும் முந்தைய வேதங்கள் எனப்படுபவற்றில் காண்கின்ற படியும் (பகவத் கீதை 6:30), உபாகமம் (6:4-5), மார்க்கு (12:29) அவற்றை மெய்ப்பிக்கும் கடைசி வேதமான குர்ஆனில் (30:30-31) காண்கின்ற படியும் இறைவனை மட்டுமே தனித்து வணங்கி, துதித்து, தொழுது வருவோமாக! அதன் மூலம் நமது ஆதிக்குற்றம் மன்னிக்கப்பட்டு இறைவனிடம் திரும்புவோமாக!

# நபிக்கு ஸலவாத்து சொல்வது இணைவைப்பு (ஷிர்க்) ஆகும்

(நபியே) நீர் கூறும்: "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன்; மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன்; தீங்கும் என்னைத் தீண்டியிராது. நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன் மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை ". (7:188)

முஹம்மதியர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான, அதிகமாக துஷ்பிரயோகம் செய்யப்படும் வசனம் 33:56.

இறைவனும், அவரின் வானவர்களும் நபிக்கு உதவி செய்கிறார்கள். நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அவருக்கு உதவி செய்து அவரை எவ்வாறு மதிக்க வேண்டுமோ அவ்வாறு மதியுங்கள் (33:56)

ஒரு சராசரிமுஹம்மதியரிடம் 'ஸல்லூ அலைஹி' என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டால் “நபி மேல் ஸலவாத்துச் சொல்ல வேண்டும்' என்பதே அதன் அர்த்தம். (அதாவது 'முஹம்மத் நபியை இரவும் பகலும் தியானித்துக் கொண்டிருப்பது '!) என்று கூறுவார்.

இங்கு, நாம் ஷைத்தானின் சூழ்ச்சியையும், தூய்மையான 'முஸ்லிம்களை' முஹம்மதியர்களாக் மாற்றுவதில் அவன் அடைந்திருக்கும் மிகப்பெரும் வெற்றியையும் கண்டு கொள்ள முடியும். 33:56 வசனத்திற்குச் சில வசனங்களுக்கு முன்னால் 33:41-42ல் நமக்கு ஒரு வலிமையான கட்டளையை இறைவன் இடுகிறார். அதில் நாம் நம்மைப் படைத்த இறைவனை, மிக மேலான, என்றென்றும் துதிப்பிற்குரிய நமது இறைவனை மட்டுமே தியானிக்கவும் தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்கவும் வேண்டுமென்று கூறுகிறார். நாம் இரவும் பகலும் இறைவனின் திருப்பெயர்களை மட்டுமே துதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

**" ' நம் பிக்கை கொண்டோரே! நீங்கள் இறைவனையே தொடர்ந்து தியானித்துக்கொண்டிருக்க வேண்டும். மேலும் இரவும் பகலும் அவரை மட்டுமே நீங்கள் துதித்துக் கொண்டிருக்க வேண்டும்" (33:41-42)**

ஆனால் முஸ்லிம்கள் இறைவனுடன் முஹம்மத் நபியையும் இணைத்துதுதித்துக் கொண்டிருப்பதைக்காண ஷைத்தான் முடிவு செய்தான். முஹம்மத் நபிக்குச் சுயமாக எந்தச் சக்தியும் இல்லை என்று குர்ஆன் கூறும் உண்மையை மறைத்து அவர்களை ஏமாற்ற முடிவு' செய்தான். என்றென்றும் ஜீவித்தி ருக்கக்கூடியவரைபூரணமானவரை, அனைத்துப்படைப்புக்களுக்கும் அதிபதியானவரை ஒரு மனிதருடன்

இணைத்து துதிக்கச் செய்ய ஏற்பாடு செய்தான்.

நீர் கூறும்: நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே. (பார்க்க : 10:49, 18:110, 41:6, 72:21)

அதைத் தொடர்ந்து 33:43-ம் வசனம் இறைவனும் அவரின் வானவர்களும் நம்பிக்கைக் கொண்ட அனைவருக்கும் உதவி (யுஸல்லூ ) செய்வதாகக் கூறுகிறது.

ஸலவாத்து ஓதுவதற்கு ஆதாரமாக இவர்கள் எடுத்து வைக்கும் வசனத்திற்குச் சில வசனங்கள் முன்னரே இவ்விரு வசனங்களும் இருந்தாலும் ஷைத்தான் முஸ்லிம் மக்களின் கவனத்தை இவ்வசனங்களை விட்டுத் திருப்பி, அவர்களை ஏமாற்றி இறைவனை மட்டுமே வணங்கும் முஸ்லிம்கள் என்ற நிலையிலிருந்து மாற்றி தங்கள் வணக்கத்தின் பெரும் பகுதியை முஹம்மத் நபிக்குச் செலுத்தும் முஹம்மதியர்களாக ஆக்குவதில் வெற்றியடைந்தான்.

இப்பொழுது நாம் 33:56-ம் வசனம் மெய்யாக என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம்.

1. முதலாவதாக, இவ்வசனத்தில் 'நபி' என்ற பதம் கொண்டு முஹம்மத் விவரிக்கப் படுகிறார். இந்தக் குறிப்பிட்ட 'நபி' என்ற பதம் குர் ஆன் முழுவதும், குறிப்பாக முஹம்மதைப் பற்றிக்கூறும் போது அவர் உயிருடன் வாழ்ந்த காலத்தையே குறிக்கிறது. அவ்வாறன்றி, அவர் மரணத்திற்கு பின்னர் அல்ல. முஹம்மது நபியின் மரணத்திற்குப்பின் அவரைப் பற்றிக் குறிப்பிடும் எந்த ஒரு குர் ஆன் வசனத்திலாவது அவர் நபி என்று விவரிக்கப்படு கிறாரா? கூறுங்கள் என்ற D r . ரஷாத் கலீஃபாவின் அறை கூவலுக்கு முஸ்லிம் உலமாக்கள் அத்தகைய ஒரு வசனத்தைக்கூட இன்று வரை காட்டவில்லை.

2. குறிப்பிட்ட ஒரு சரித்திரச் சம்பவத்தை விவரிக்கும் வசனங்கள், மேலும் குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த நம்பிக்கையாளர்களுக்கு மட்டும் உரிய வசனங்கள், குர் ஆனில் காணப்படுகின்றன. அவ்வசனங்களை நாம் நன்கு சிந்தித்தால் இதை உணர்ந்து கொள்ள முடியும். நபி என்ற பதம் கொண்டு முஹம்மத் விவரிக்கப்படும் வசனங்கள் அனைத்தும் அவர் வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடுபவையே. உதாரணமாக 49:2-ம் வசனத்தில் 'நபியின் சப்தத்திற்கு மேல் உங்கள் சப்தத்தை உயர்த்தாதீர்கள் என்று நம்பிக்கையாளர்களுக்கு கட்டளையிடப்படுகிறது. இக்கட்டளையை நாம் இப்பொழுது எப்படிச் செயல்படுத்துவது? நபி மரணித்து விட்டார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (39:30) எனவே அவரால் சப்தமிட இயலாது. எனவே இக்கட்டளை நபி உயிருடன் இப்புவியில் வாழ்ந்த காலத்தில் செயல்படுத்தப் படவேண்டியது என்று நாம் அறிந்து கொள்கிறோம். மேலும் பார்க்க 33:53.

3. 'ஸல்லூ ' 'யுஸல்லீ ', 'யு ஸல்லூன்', 'ஸலாத்' ஆகிய வார்த்தைகள் அனைத்தும் 'வஸல' என்ற மூலச் சொல்லில் இருந்து பிறந்த வார்த்தைகள் ஆகும். 'வஸல' என்றால் தொடர்பு கொள்ளுதல்

என்பதே அர்த்தம் ஆகும். எனவே ' ஸல்லூ' என்ற வார்த்தைக்கு நபியுடன் தொடர்பு கொள்ளுதல், சேர்ந்து கொள்ளுதல், கூட இருத்தல், அவருக்கு நம்முடைய எல்லா பலமும் கொண்டு உதவி செய்தல் என்பதே பொருளாகும். இதை நாம் நபி வாழ்ந்த காலத்தில் மட்டுமே செய்ய முடியும். எனவேதான் இவ்வசனத் தில் நபி என்ற பதம் பிரயோகப் படுத்தப்படுகிறது.

4. ஸலாத் என்ற ஐவேளைத் தொழுகையை தொழுவதால் நம்பிக்கையாளர்கள் தங்கள் படைப் பாளருடன் தொடர்பு வைத்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய படைப்பாளர் அவர்களுடன் தொடர்பு கொள்கிறார். எனவே தான் இறைவனும் மலக்குகளும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உதவி செய்கிறார்கள், அவர்களுடன் தொடர்பு கொள்கிறார்கள் என்று 33:43 வசனம் கூறுகிறது. இறைவனும் அவரின் வானவர்களும் நபிக்கும் (ஸல்லூ) உதவி செய்கிறார்கள்., நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் (ஸல்லூ) உதவி செய்கிறார்கள் என்பதை இங்கே நாம் அறிகிறோம். ஆனால் இன்றைய முஹம்மதியர்கள் 33:56 வசனத்தை அதன் தொடரிலிருந்து முற்றிலும் துண்டித்து, அதை துஷ்பிரயோகம் செய்து முஹம்மத் நபியை அவர் விருப்பத்திற்கு மாறாக இறைவனுக்கு இணையாக ஆக்குகிறார்கள்.

இன்னல்லாஹ வ மலாயி கதஹு 'யு ஸல்லூன' அலந்நபி, யா அய்யுஹல்ல தீன ஆமனு 'ஸல்லூ' அலைஹி வஸல்லிமூ தஸ்லீமா என்று அரபியில் வருவதை ஸலவாத்துச் சொல்ல வேண்டும் என்று கூறும் இவர்கள் நபியை நம்பிக்கைக் கொண்டவர்கள் அனைவருக்கும் உதவி (ஸல்லூ ) செய்ய வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறார் என்பதைச் சிந்திக்க மாட்டார்களா?

5. நபியும் நம்பிக்கை கொண்டவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும், உதவி செய்ய வேண்டும் (ஸல்லி அலைஹிம்) என்று கட்டளையிடப்படுகிறார். (9:103)

ஆனால் முஹம்மதியர்கள் இவ்வுண்மைகள் அனைத்தையும் மறந்து விடுவர். முஹம்மத் நபியின் பெயரை இரவும், பகலும் தியானித்துக் கொண்டிருக்கும்படி ஷைத்தான் அவர்களை மனோவசியப்படுத்தி இருக்கிறான். இது தெள்ளத் தெளிவான இணை வைப்பாகும் இணைவைப்பதை இறைவனும் வெறுக்கிறார், நபியும், நம்பிக்கை கொண்டவர்களும் வெறுக்கின்றனர். முஹம்மதியர்கள் மட்டுமே அதை விரும்புவர்.

வசனம் 30:40 இறைவன்தான் நம்மைப் படைத்தார், அவரே நமக்கு உணவு வழங்குகிறார், அவரே நம்மை மரணிக்கச் செய்கிறார், அவரே மீண்டும் நம்மை எழுப்பி நம் செயல்களுக்குக் கூலி தருவார் என்று நமக்கு நினைவூட்டுகிறது. எந்த இணையாளரும் இவற்றில் எதையும் செய்வதில்லை. செய்யவும் முடியாது. எனவே மெய்யான இறையடியார்கள், எல்லாம் வல்ல தங்கள் படைப்பாளரையே அதிகமதிகம் தியானிப்பர். அவர் திருப்பெயர்களைச் சொல்லி இரவும் பகலும் அவரையே துதிப்பர்.

# அல்குர்ஆன் ஐ வேற்றுமொழியில் மொழிபெயர்த்த முதல் அரபி

அகிலங்களின் இரட்சகரான இறைவனிடமிருந்து மனித குலத்திற்கு இறக்கப்பட்ட குர்ஆன் ஐ 1400 வருடங்களாக அரபி அல்லாத வேற்று நாட்டவரே மொழிபெயர்த்து வந்துள்ளனர். ஆனால் 1974 ஆம் ஆண்டு முதன் முதலாக அரபியை தாய் மொழியாகக் கொண்ட (எகிப்தில் பிறந்து வளர்ந்தவர்) Dr. **ரஷாத் கலீபா** அவர்கள், குர்ஆனை இறைவனின் நாட்டப்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதன் மூலம் உலகிற்கு குர் ஆனின் மிகச் சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு கிடைத்தது இன்ஷா அல்லாஹ் நம் இதழில் இந்த ஆங்கில மொழி பெயர்ப்பும் அதன்தமிழ் ஆக்கமும் தொடர்ந்து வெளிவரும்.

## வாசகர்கள் கவனத்திற்கு

அன்புள்ள வாசகர்களே, புதிய நினைவூட்டல் என்ற இந்த மாத இதழ் இலாப நோக்கின்றி இறை வழியில் மனிதர்களுக்கு, சேவை செய்வதற்காக மட்டுமே ஆரம்பித்து நடத்தப்படுகிறது. இதற்கு நீங்கள் சந்தா செலுத்தி வாங்கி பயனடையுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களின் பெயர்களுக்கும் சந்தா செலுத்தி பயனடையச் செய்யுங்கள்

## கேள்வி-பதில் பகுதி

அடுத்த இதழில் கேள்வி பதில் பகுதி தொடங்குகிறது. வாசகர்களின் கேள்விகளுக்கு அல்குர்-ஆனின் ஒளியில் பதில்கள் தரப்படும். இறைவனின் நாட்டப்படி.

**கேள்விகளும், விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.**

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662